பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalāikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | மார்கழி 12 | புதன்கிழமை 27.12.2017 | கதிர் 52

### அரியாலை இளைஞன் கொலை:
## சி.ஐ.டியினரின் விளக்கமறியல் மேலும் நீடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.27
அரியாலைமணியந்தோட்டம் பகுதியில் இளைஞரொருவர் சுட்டுக்கொல்லப்பட்டசம்பவம்தொடர்பான வழக்கின் சந்தேகநபர்களான சிறப்பு பக்கம் 18 >>>

# கொள்கைகள் மட்டுமே மக்களுக்கு; கொடுக்கல் வாங்கல் தலைமைக்கு!



## தமிழரசைக் கடுமையாக சாடுகிறார் முதல்வர் விக்கி

யாழ்ப்பாணம், டிசெம்பர் 27
“எமது தேர்தல் விஞ்ஞாபனக் கொள்கைகளுக்கும் யதார்த்தத்தில் விரவியிருந்த நிலைமைக்கும் பெரும் விரிசல் இருப்பதை வெகுவிரைவில் நான் உணர்ந்துகொண்டேன். கொள்கைகள் மக்களுக்கு. ஆனால் அரசியல் கொடுக்கல் - வாங்கல்கள் தலைமைப் பீடங்களுக்கே என்பதுதான் யதார்த்தமாக இருந்தது. இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட முடிவுகள் எவ்வித கூட்டுப் பரிமாற்றத்தின் அடிப்படையில் எடுக்கப்படவில்லை என்பதையும் கண்டுகொண்டேன்.”

- இவ்வாறு குறிப்பிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியையும் தமிழ்க் கூட்டமைப்பையும் கடுமையாகச் சாடியிருக்கின்றார் வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன். பக்கம் 08 >>>

## வவுனியா பஸ் நிலையத்தில் நேற்றுப் பெரும் பதற்றநிலை

### தனியார் பஸ் சேவை தடுக்கப்பட்டதால்



வவுனியா, டிசெ. 27
வவுனியாபழையபஸ் நிலையத்தில் இருந்து தனியார் பஸ்கள் உள்ளூர் சேவைகளை நேற்று முன்னெடுக்கச் சென்றபோது, இ.போ.ச. வவுனியா டிப்போ ஊழியர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தியமையால் அங்கு பதற்றநிலை பக்கம் 03 >>>

## சம்பந்தனை ஓடோடிப் போய் எதற்காக சந்தித்தார் மஹிந்த?

### கேள்வி எழுப்புகிறார் கஜேந்திரகுமார்



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், டிசெ.27
மஹிந்தவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவரப் பாடுபடுவதாகக் கூட்டமைப்பினர் எம் மீது பிரசாரங்களைச் செய்து வந்தனர். ஆனால் இது வரை எம்மைச் சந்திக்க ஆர்வ மற்றிருக்கும் மஹிந்த ஓடோடிப் போய் சம்பந்தனை நலம் விசாரித்தது ஏன்?

– இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். பக்கம் 18 >>>

## ஈ.பி.டி.பியின் விஞ்ஞாபனம் இன்று வரும்

யாழ்ப்பாணம்,டிசெ.27
‘சொன்னதைச்செய்த வர்கள்; செய்வதையே சொல்பவர்கள்’ என்ற பிரதான மகுடத்துடன் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உள்ளூராட்சித் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று பக்கம் 18 >>>

## சர்வதேசத்தின் கதவுகளும் இனி எமக்காகத் திறக்காது

### அல் ஹூசைனின் நிலைப்பாடு அதை உணர்த்தியுள்ளது என்கிறார் அனந்தி

யாழ்ப்பாணம்,டிசெ.27
அனைத்துலக நாடுகளின் உதவியுடன் இலங்கை அரசு மேற்கொண்டதமிழினஅழிப்பு நடவடிக்கைக்கு நீதி கேட்டு நாம் முன்னெடுத்துவரும் போராட்டத்தில், எமக்காக இனிமேல் சர்வதேசத்தின் கதவுகளும் திறக்கப்போவதில்லை என்பதையே ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் பக்கம் 18 >>>

## சோகமயமானது வடக்கு - கிழக்கு

### அனைத்து இடங்களிலும் நேற்று ஆழிப் பேரலை நினைவேந்தல்



யாழ்ப்பாணம்,டிசெ.27
தெற்காசியாவையே உலுக்கிய ஆழிப்பேரலை இடரின்13ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.
வடக்கு-கிழக்கில் அனைத்து பக்கம் 18 >>>

## வாக்கு அட்டை விநியோகம் ஜனவரி மூன்றாம் வாரத்தில்

கொழும்பு, டிசெ 27
உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் ஜனவரி மூன்றாம் வாரமளவில் நாடளாவிய ரீதியாக ஆரம்பமாகும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

பெப்ரவரி10 ஆம்திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான செயற்பாடுகள் தற்போது பக்கம் 03 >>>

## சிதம்பரத்துக்கு கப்பல் சேவை; நடராஜனுடன் நேற்றுப் பேச்சு

### மறவன்புலவு சச்சிதானந்தன் தலைமையில்



யாழ்ப்பாணம், டிசெ.27
திருவாதிரை உற்சவத்தை முன்னிட்டுக் காங்கேசன்துறையிலிருந்து இந்தியாவுக்குக் கப்பல் பயணம் மேற்கொள்ள இலங்கை - இந்திய அரசுகள் அனுமதி வழங்கியுள்ள நிலையில், அது பக்கம் 18 >>>

## தேர்தல் பரப்புரைகளுக்கு பெப்.7 நள்ளிரவுடன் தடை



கொழும்பு, டிசெ.27
உள்ளூராட்சித் தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகள் எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி நள்ளிரவுடன் தடை செய்யப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தது.

பெப்ரவரி 7ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர் தேர்தல் சட்டங்களை மீறும் எவருக்கும் பக்கம் 18 >>>

## ஜன. 10க்கு முன்னர் தெற்கு அரசியலில் அதிரடி மாற்றங்கள்

கொழும்பு, டிசெ 27
தெற்கு அரசியலில் அதிரடி மாற்றங்கள் எதிர்வரும் 28ஆம் திகதிக்கும் ஜனவரி 10ஆம் திகதிக்கும் இடையில் ஏற்படும் என்று தெரிவித்த அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன, எதிர்த்தரப்பிலிருந்து பக்கம் 18 >>>

## அமைச்சர் ரிஷாத் பதியுதீனை காதில் பிடித்திழுத்து வீசுங்கள்!

### ஞானசார தேரர் கோபாவேசம்



கொழும்பு, டிசெ.27
அமைச்சர் ரிஷாத் பதியுதீனைப் பணிநீக்கவேண்டுமெனப் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார். பக்கம் 18 >>>

# யாழ்ப்பாண மாநகர முதல்வரானால் ஊதியம் பெறாது பணியாற்றுவேன்

## சட்டத்தரணி மணிவண்ணன் தெரிவிப்பு




யாழ்ப்பாணம், டிசெ.27

யாழ். மாநகர சபை முதல்வராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் எந்தவித ஊதியமும் பெறாமல் பணியாற்றுவேன் எனத் தமிழ்த் தேசியப் பேரவையின் முதல்வர் வேட்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

'தூய கரங்கள் தூய நகரம்' என்ற கோசத்தை முன்னெடுத்து இந்தத் தேர்தலை எதிர்கொள்ளவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள தமிழ்த் தேசியப் பேரவை, யாழ் மாநகர முதல்வர் வேட்பாளராக விஸ்வலிங்கம் மணிவண்ணனை உத்தியோகபூர்வமாக நேற்று அறிவித்தது.

துணை முதல்வர் வேட்பாளராக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஆரோக்கியநாதன் தீபன் திலீசன் அறிவிக்கப்பட்டார்.

இவை தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்றுச் செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து உரையாற்றிய யாழ். மாநகர முதல்வர் வேட்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் சைக்கிள் சின்னத்தில் தமிழ்த் தேசியப் பேரவை வடக்கு - கிழக்கு முழுவதும் போட்டியிடுகின்றது. தமிழ்த் தேசியப் பேரவையில் தமிழ் மக்கள் பேரவையில் அங்கம்வகிக்கின்ற பல பொது அமைப்புக்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இணைந்து போட்டியிடுகின்றன. இவற்றுடன் 10 பொது அமைப்புக்களின் கூட்டான தமிழர் சம உரிமை இயக்கம் மற்றும் நம்பிகள் நல்வாழ்வுக் கழகம், தமிழர் வாழவுரிமை இயக்கம் ஆகியன இணைந்து போட்டியிடுகின்றன.

இவற்றைவிட வேறு பல அமைப்புக்களும் எங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டியுள்ளன. அந்த அமைப்புக்களின் யாப்பின் அடிப்படையில் பகிரங்க அரசியல் ஆதரவு வழங்க முடியாது என்பதால் அவற்றின் விவரங்களை வெளியிட முடியாதுள்ளோம்.

இந்தத் தேர்தலிலே நாங்கள் தூய கரங்கள் தூய நகரம் என்ற கோசத்தை முன்னெடுத்து இந்தத் தேர்தலை எதிர்கொள்ளவுள்ளோம்.

நாங்கள் மக் களினால் தேர்ந்தொடுக்கப்பட்டு யாழ். மாநகர சபையைக் கைப்பற்றுவோமாக இருந்தால் எந்தவிதமான கறையும் படியாத - இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகாத - இலஞ்ச ஊழலை முற்றாக ஒழிக்கின்ற ஒரு சபையை நாங்கள் உருவாக்கி நிர்வகிப்போம். தூய நகரம் என் கின்றபோழுது தூய்மையான காற்று, துய்மையான நீர், துய்மையான நிலம் என்கின்ற விடயங்களை யாழ். மாநகருக்குள் அமுல்படுத்துவோம். இலங்கையின் முன்மாதிரியான நகரமாக யாழ் நகரம் மாற்றியமைக் கப்படும். இத்திட்டங்களை ஏனைய பிரதேச சபைகளுக் கும் அமுல்படுத்துவோம்.

எமது ஆட்சியில் இன,மத, சாதி பாகுபாடுகள் இன்றிய ஒரு சமத்துவ நிலை பேணப்படும். - என்றார். (ஐ)

## தபால் வாக்களிப்பு முடிவு தனியாக வெளியிடப்படா

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது தபால் மூல வாக்களிப்பு தொடர்பான முடிவுகள் தனியாக வெளியிடப்படமாட்டாது என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தபால் மூல வாக்களிப்பு செய்யப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் அனைத்தும் தேர்தல் நடைபெறும் தினம் அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களின் வாக்கு எண்ணும் நிலையங்களில் ஒப்படைக்கப்படும் என்றும் கூறினார்.

மக்களின் வாக்குகளுடன் இந்தத் தபால் மூல வாக்குகளும் எண்ணப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும். இதே வேளை, தேர்தல் காண் காணிப்பிற்காக வெளிநாட்டுக்கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத் தப்படமாட்டார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## குளவிக் கொட்டுக்கு இலக்காகிய 20 பேர் வைத்தியசாலையில்!

கொழும்பு , டிசெ. 27

பொகவந்தலாவை பொகவானை தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த 20 பேர் குளவி கொட்டுக்கு இலக்காகிப் பொகவந்தலாவை வைத்திய சாலையில் சேர்க்கபபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது எனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். கற்பாறையின் அடிப்பகுதி ஒன்றில் இருந்த குளவிக் கூடு கலைந்ததால் குளவிகள் தொழிலாளர்களை தாக்கியுள்ளன.

இதில் 18 பெண் தொழிலாளர்களும் இரு ஆண் தொழிலாளர்களும் உள்ளடங்குகின்றனர். இதில் ஆறு பெண் தொழிலாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திருப்பியுள்ளதோடு மேலும் 12 பெண் தொழிலாளர்களும் 2 ஆண் தொழிலாளர்களும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் எனப் பொகவந்தலாவை வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஏ.எஸ்.கே.ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

குளவிக் கொட்டுக்கு இலக்கானவர்கள் குறித்து அச்சப் படத் தேவையில்லையெனவும் வைத்திய அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கூட்டமைப்பை நன்றாக பாதுகாக்கிறது நல்லாட்சி

யாழ்ப்பாணம், டிசெ.27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசின் ஒரு அங்கம். அதனைப் பிரித் துப்பார்க்க முடியாது. சுமந்திரனுக்கு அமைச்சுப் பதவி கொடுக்கப்பட்டதோ இல்லையோ, தமது சொந்தக் கட்சியில் உள்ள அமைச்சர்களுக்கு மேலாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை நல்லாட்சி அரசு வைத்திருக்கிறது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஓர் அமைச்சருக்கு வழங்கக்கூடிய பாதுகாப் பையும் விடக் கூடிய பாதுகாப்பு எதிர்க்கட்சித் தலைவருக்கும், பேச்சாளருக்கும் உள்ளது. தமது சொந்த மக்களைச் சந்திக்க முடியாது. அவ்வாறு சந்தித்தால் அடிவிழும் என்ற நிலையில், அவர்களைப் பாதுகாப்பதற்கு இவ்வாறான பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்படுகின்றதெனில் எந்தளவுக்குச் செல்வாக்கு மிக்கவர்களாக அவர்கள் இந்த அரசுடன் இருக்கின்றார்கள் என்பதை மக்கள் விளங்கிக் கொள்ள முடியும்.

இந்த அரசில் மட்டுமன்றி, கடந்த அரசிலும் 3ஆவது அதி உயர்பாதுகாப்புக்கள் அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் இராசம்பந்தனுக்கு வழங்கப் பட் டிருந்ததுடன், நீலம் திருச்செல்வத்துக்கும்வழங்கப்பட்டிருந்தது.

அரசுக்கு எதிராகப் போராடி உரிமைகளைப் பெற்றுக்கொள்கின்றோம் எனக் கூறிக்கொண்டுமக்கள்மத்தியில்சென்று வாக்குக்களைக்கேட்கின்றார்கள். ஆனால் அந்த அரசுதான் அவர்களை அதிகமாகப் பாதுகாப்பதற்கு விரும்புகின்றது.

- என்றார். (ஐ -7)

## தபால் தொழிற்சங்கம் இன்று ஆர்ப்பாட்டம்

நாடு முழுவதும் பிரதான நகரங்களில் இன்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற் கொள்ளப்படும் எனத் தபால் தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தபால் திணைக்களத்தின் ஆள்சேர்ப்பு நடைமுறையை முறைமைப்படுத்துவதாக அதிகாரிகள் பல தடவைகள் கூறினாலும், அதனைச் செயற்படுத்தாமல் இருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னர் இடம்பெற்ற கலந்துரையாடலில் இரண்டு வாரங்களில் தீர்வு பெற்றுத்தருவதாகக் கூறிய வாக்குறுதியும் தற்போது மீறப்பட்டுள்ளதாகத் தபால் தொழிற்சங்க கூட்டமைப்பின் இணை அமைப்பாளர் கே.ஆர். வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

இந்த நிலைமையைத் தீர்க்க அதிகாரிகள் தவறும் பட்சத்தில் எதிர்வரும் தேர்தலின் போது வாக்காளர் அட்டைகள் விநியோகிப்பதில் தடைகள் ஏற்படலாம் எனவும் அவர் மேலும் கூறினார். (ஐ)



# இரணைதீவில் மக்களை மீள்குடியேற்ற வேண்டும்

## ஜனாதிபதிக்கு டக்ளஸ் எம்.பி. கடிதம்



யாழ்ப்பாணம், டிசெ.27

யுத்தகாலத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காக இரணைதீவில் இருந்து 1990 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட மக்களை மீண்டும் அவர்களது சொந்த இடத்தில் மீளக்குடியேற்ற அனுமதியளிக்க ஆவன செய்யவேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இரணைதீவு மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:


நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலின்போது சொந்த இடத்திலிருந்து இடம்பெயர்க்கப்பட்ட மக்களுக்கு அவர்களது சொந்த வாழ்விடங்களை மீண்டும் வழங்கி அவர்களை மீள்குடியேற்றம் செய்வதாக வாக்குறுதி வழங்கியிருந்தீர்கள்.

அதற்கமைவாக யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் சில ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை நாம் அறிவோம். அந்தப் பணிகள் தொடராக முன்னெடுக்கப்பட்டு வலி. வடக்கில் வாழ்ந்த மக்கள் தமது சொந்த நிலத்தில் குடியேறுவதற்குத் தேவையான மீள்குடியேற்ற வசதிகளை அந்த மக்களுக்கு வழங்கி ஊக்குவிக்கவேண்டும்.

அதுபோல் 27 வருடங்களுக்கு மேலாகச் சொந்த இடத்திலிருந்து இடம் பெயர்க்கப்பட்டுக் கடலின் மறுகரையான இரணைமாதா நகரில் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் இரணைதீவு மக்களின் மீள்குடியேற்ற கோரிக்கைக்கும் உரிய நியாயம் கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும்.

அவர்கள் குடும்பங்களாக இரணைமாதா நகரில் தற்போது வாழ்ந்து வந்தாலும்,அவர்களது பூர்வீக நிலமான இரணைதீவிலேயே தொழில் செய்வதற்கான வசதிகளைக் கொண்டிருந்தவர்கள். அங்கே அட்டை வளர்ப்பு, கால் நடைகள் வளர்ப்பு, மீன்பிடியில் ஈடுபடுவது என்பனவற்றில் ஈடுபட்டு வாழ்ந்தவர்கள்.

எனவே உடனடியாக இரணைதீவில் மீள்குடியேற்றம் செய்வதற்கு தடைகள் ஏதும் இருந்தால், அங்கு தங்கியிருந்து மேற்கூறிய தொழில்களில் ஈடுபடுவதற்கு முதல் கட்டமாக அனுமதியை வழங்கவேண்டும் என அந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள். அந்த மக்களின் கோரிக்கைக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தருவீர்கள் என்று நம்புகின்றேன் – என்றுள்ளது. (ஐ)




# சு.க. கூட்டணியில் 22 கட்சிகள் போட்டி

கொழும்பு, டிசெ.27

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டணியில் 22 கட்சிகள் போட்டியிடவுள்ளதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயக முன்னணி உள்ளிட்ட முக்கிய சிறுபான்மைக் கட்சிகளும் சு.கவின் கூட்டணியிலேயே போட்டியிடவுள் ளன என்றும் அது கூறியது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் 22 கட்சிகள் போட்டியிடுகின்றன. அதில் 15 கட்சிகள் நேரடியாகச் சு.கவின் கைச் சின்னத்தில் போட்டியிடுவதுடன், ஏனைய கட்சிகள் வெற்றிலைச் சின்னத்திலும், தமது கட்சியின் சின்னங்களிலும் போட்டியிடவுள்ளன.

வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறுபான்மைக் கட்சிகளும் சு.கவின் கூட்டணிக்கு ஆதரவளித்துள்ளன. ஈழமக்கள் ஜனநாயக முன்னணி சு.கவின் கூட்டணியில் போட்டியிடுவதுடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸூம் கூட்டணியில் போட்டியிடுகிறது.

123 தொகுதிகளில் சு.க கைச் சின்னத்தில் போட்டியிடுவதுடன், 207 தொகுதிகளில் வெற்றிலைச் சின்னத்திலும் போட்டியிடவுள்ளது என்றும் அந்தக் கட்சித் தெரிவித்துள்ளது. (ஐ)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டது. உடனடியாகப் பெரும் எண்ணிக்கை யான பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள புதிய பஸ் நிலையத்தில் இருந்து கடந்த 25 ஆம் திகதி முதல் அரச மற்றும் தனியார் பஸ் சேவைகள் நடைபெற வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் அறிவித்திருந்தார்.

எனினும் இதனை நடைமுறைப்படுத்துவதில் இ.போ.ச. தரப்பால் சில பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. அத்துடன் நத்தார் மற்றும் பண்டிகைக் காலம் என்பதால் புதிய பஸ் நிலையத்தில் இருந்து முழுமையான சேவையை மேற்கொள்வதை இரண்டு வாரங்களுக்குப்பிற்போடுவதுஎனத்தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் இடைப்பட்ட காலப் பகுதியில் தனியார் பஸ் உள்ளூர் சேவைகள் மட்டும் பழைய பஸ் நிலையத்தில் இருந்தும், தூர இடங்களுக்கான சேவைகள் புதிய பஸ் நிலையத்தில் இருந் தும் செயற்படுத்துவதற்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார் என முதலமைச்சரின் சிரேஸ்ட செயலாளர் விஜயலட்சுமி கேதீஸ்வரன் நேற்று முன் தினம் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து நேற்றுக் காலை வவுனியா இ.போ.ச. பஸ்நிலையத்துக்குத்தனியார்பஸ்கள்உள்ளூர்சேவைகளை முன்னெடுக்க சென்றபோது இ.போ.ச. ஊழியர்கள்பிரச்சினையைஏற்படுத்தியதாகதெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டனர். பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அங்கு வருகை தந்து இரண்டு தரப்பினருடனும் கலந்துரையாடினர்.

இதனையடுத்து புதிய பஸ் நிலையத்தில் இருந்து தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடவும், பழைய பஸ் நிலையத்தில் இருந்து இ.போ.ச. பஸ்கள் சேவையில் ஈடுபடவும் தற்காலிகமாக இணக்கம் காணப்பட்டது.

உரிய நடவடிக்கை மூலம் இரு தரப்பினரும் புதிய பஸ்நிலையத்தில்இருந்துசேவைகளைவழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனியா நகரசபைச் செயலாளர் இ.தயாபரன் தெரிவித்தார். இதனையடுத்து முறுகல் நிலை பிற்பகலில் முடிவுக்கு வந்தது.

இது தொடர்பில் தனியார் பஸ் சங்கத் தலைவர் இ.இராஜேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாண முதலமைச்சரின்கீழ் உள்ள போக்குவரத்து அமைச்சின் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் எமக்கும், வவுனியா நகர சபைச் செயலாளருக்கும், இலங்கைப் போக்குவரத்துச் சபையினருக்கும், இடையில் மூன்று மணிநேரம் சந்திப்பு இடம்பெற்றது. இதன்படி எமது தனியார்பஸ்உள்ளூர்சேவையை நகரசபைக்குச்சொந்தமான பழைய பஸ் நிலையத்தில் இருந்து நடத்துமாறும், குழப்பம் விளைப்பவர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து நாம் பழைய பஸ் நிலையத்திற்குச் சென்ற போது எமது பஸ்களை உள் நுழையவிடாது இ.போ.சவினர் தடுத்து குழப்பம் விளைவித்தனர். அவர்களது செயற்பாட்டுக்கு உடந்தையாக வவுனியாப்பொலிஸாரும் நடந்துகொண்டனர். இதனையடுத்து வவுனியா நகரசபையில் வடக்குமாகாணசபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ஜி.ரி.லிங்க நாதன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் செ.மயூரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நகர சபைச் செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன்படி எம்மிடம் 5 நாள்கள் கால அவகாசம் கேட்டுள்ளனர். எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் நகர சபைக்குச் சொந்தமான பஸ் நிலையத்துக்கான ஒப்பந்த காலம் முடிவுறுவதால் அதன் பின்னர் அதாவது முதலாம் திகதி முதல் எந்தவொரு பஸ்ஸையும் வவுனியா பழைய பஸ் நிலையத்திலோ அல்லது முதலாம், இரண்டாம் குறுக்குத் தெருவிலோ நிறுத்துவதற்குத் தடை விதிப்பதாகவும், அதற் குரிய கடிதங்கள் சட்ட ரீதியாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் வவுனியா நகரசபையால் வழங்கப்பட்ட உறுதிமொழிக்கு அமைவாக நாம் புதிய பஸ் நிலையத்தில் இருந்துஎமதுசேவைகளைவழங்குகின்றோம்.-என்றார்.

இ.போ.சபை ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் எஸ்.வாமதேவன் தெரிவிக்கையில் –

பழைய பஸ் நிலையம் வவுனியா நகர சபையால் 99 வருட குத்தகைக்கு எமக்கு வழங்கப்பட்டுள்ளது. நாம் வாடகை செலுத்தி வருகின்றோம். எமக்கு உரிய வகையில் எதுவும் தெரியப்படுத்தாது தனியார் பஸ்களை எமது பஸ் நிலையத்துக்குள் செலுத்த முற்பட்டதால் தான் குழப்பம் ஏற்பட்டது. போக்குவரத்துச் சபை எடுக்கும் தீர்மானத்திற்கு அமைவாகவே எம்மால் செயற்பட முடியும். நாம் மத்திய அரசின் கீழே செயற்படுகின்றோம். – என்றார்.

இதேவேளை, குழப்பம் ஏற்படுத்தி மக்களது இயல்பு வாழ்வுக்கு பங்கம் விளைவித்தமைக்காக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் வவு னியா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதில் தனியோர் பஸ் சங்கத்தைச் சேர்ந்த மூவரையும், இலங்கைப்போகுவரத்துச்சபைசாலைமுகாமையாளர் உட்பட இ.போ.சபை தொழிற்சங்க உறுப்பினர்கள் மூவரையும் இன்று முன்னிலையாகுமாறு வவுனியா நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது. (ஐ-100)

## வாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மும்முரமாக இடம்பெற்று வரும் நிலையில், பெப்ரவரி 7 ஆம் திகதி நள்ளிரவுடன் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் அனைத்துப் பிரசார நடவடிக்கைகளும் தடை விதிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவால் அறிவிக்கப் பட்டுள்ளது.

தேர்தல் தொடர்பில் இன்று புதன்கிழமை கட்சிகளின் செயலாளர்களுடனும், நாளை தெரிவத்தாட்சி அதிகாரிகளுடனும் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய குறிப்பிட்டார்.

இந்நிலையிலேயே ஜனவரி மூன்றாம் வாரமளவில் அதாவது, ஜனவரி 19 ஆம் திகதிய எவில் நாடளாவிய ரீதியாக வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்குத் தேர்தல்கள் ஆணையம் தீர்மானித்துள்ளது என்று தகவல் கிடைத்துள்ளது.

இதற்கான செயற்பாடுகளைத் தற்போது மேற்கொண்டு வரும் ஆணைக்குழு, உள்ளூராட்சித் தேர்தலின்போது பெண்கள் மட்டும் வாக்களிக்கக்கூடிய வகையில், விசேட வாக்களிப்பு நிலையங்களை மாகாண மட்டத்தில் நிறுவுதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிலையங்களில் பாதுகாப்புக்காகவும் பெண் பொலிஸாரே அமர்த்தப்படுவார்கள் என்றும், பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் இருந்து இதற்கான அனுமதி கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir தினசரிப் பத்திரிகையை இங்கே பெற்றுக்கொள்ள்லாம்

பழமுதிர்சோலை பல்பொருள் வாணிபம் – கந்தர்மடம்.
மேரி பாமசி – குருநகர்.
றஸ்ட் புத்தகசாலை – சுன்னாகம்.
விநாயகர் ஸ்ரோர்ஸ் – கட்டுடை.
வெகா ஸ்பொட் – குஞ்சர் கடை சந்தி, கரவெட்டி.
கஜமுகன் மல்ரி சென்ரர் – புத்தூர் சந்தி.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சம்பந்தனின் கோரிக்கை

*“புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் மூலம் தற்போதைய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய ஒரு சூழல் தென்படுகின்றது. அத்தகைய விடயம் முன்னேற்றம் கண்டு தீர்வுக்கான நல்லதொரு வாய்ப்புக் கிட்டுமானால், அதைக் குழப்பி விடாதீர்கள். அதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு முழுத் தமிழினத்தின் சார்பிலும் கேட்டுக் கொள்கிறேன்.”* - என்ற சாரப்பட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார், எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

தம்மை ஆஸ்பத்திரியில் சுகம் விசாரிக்க வந்த மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவர் மகன் நாமல் ராஜபக்ஷ ஆகியோரிடமே இந்தக் கோரிக்கையை நேரில் வைத்திருக்கின்றார் தமிழர் தரப்பின் தலைவரான இரா.சம்பந்தன்.

அது மாத்திரமல்ல, “தமிழர்களுக்கு ஒரு நீதியான தீர்வு கிட்ட வேண்டுமானால் அதற்கு உங்களின் ஒத்துழைப்பு அவசியம். அது உங்களால்தான் தரப்பட முடியும்.” - என்றும் சம்பந்தன் கூறினாராம் எனவும் தெரிகின்றது.

அதற்குப் பதிலளிக்க முயன்ற மஹிந்த ராஜபக்ஷ, “அதற்குத் தான் எனது ஆட்சிக் காலத்தில் பேச வாருங்கள் என அழைத்தேன். நீங்கள் வரவில்லையே!” - என்ற சாரப்படக் கூறியிருக்கின்றார்.

அப்படி அவர் கூறிய கையோடு அதற்கு விளக்கமளிக்க முயன்றார் சம்பந்தன்.

“இல்லை இல்லை. நீங்கள் இப்போது சுகவீனமுற்றிருக்கின்றீர்கள். அவை குறித்தெல்லாம் பிறகு நாங்கள் ஆற அமர இருந்து கட்டாயம் பேசுவோம். பேச வேண்டும்.” என்று கூறினார் மஹிந்த ராஜபக்ஷ எனவும் அறியவந்தது.

தன்னுடைய ஆட்சிக் காலத்தில் தாம் தமிழர் தரப்புடன் - தமிழர் தரப்பின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் - பேச்சு மூலம் சுமுகத் தீர்வுகான முயன்றார் என்றும் -

ஆனால், கூட்டமைப்பினர்தான் சமரசப் பேச்சுக்கு, இணக்கத் தீர்வுக்கான சமாதான முயற்சிகளுக்கு - உடன்பட்டு வரவேயில்லை என்றும் - சாரப்பட மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றமை இது முதல் தடவையல்ல.

நல்லாட்சி அரசு ஏற்பட்டு, அமைதித் தீர்வுக்கான சமாதான முயற்சிகள் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்ட காலம் தொடக்கமே முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல இப்படி ஒரு கதையை அவர் அவ்வப்போது வெளியிட்டுத்தான் வருகின்றார்.

2009 மே மாதத்தில் யுத்தம் முடிவுக்கு வந்து 2010 இல் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையாக ஜனாதிபதியான பின்னர், அவரது அரசுடன் அமைதித் தீர்வுக்கான பேச்சுகளில் நேர்மைச் சுத்தியுடனும் முழு ஈடுபாட்டுடனும், முழு அளவில் கூட்டமைப்பு பங்குபற்றியது.

அவரது அரசுப் பிரதிநிதிகளுடன் தமிழ்க் கூட்டமைப்பு பதினாறு சுற்றுப் பேச்சுக்களை நடத்தியது. தனது பக்கத்தில் இருந்து தீர்வுக்கான யோசனைத் திட்ட ஆவணம் ஒன்றைக் கூட கூட்டமைப்பு சமர்ப்பித்தது.

அதற்கு தமது பதிலை அரசுத் தரப்பு தரும் என்று கூறிக் கூறியே காலத்தை இழுத்தடித்தது.

அச்சமயம், தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளின் பட்டியலை வெளியிடுதல், அவர்களை கூட்டமைப்பினரும் உறவினர்களும் நேரில் சென்று பார்வையிடுதல் என்பன உட்பட பல விடயங்களில் இணக்கம் காணப்பட்டன என அவ்வப்போது இந்தப் பேச்சுக்களின் முடிவில் அறிவிக்கவும் செய்தனர். ஆனால், இந்த இணக்க ஏற்பாடுகள் எவையும் நடைமுறைப்படுத்தப்படவேயில்லை.

இந்த பதினாறு சுற்றுப் பேச்சுகள் தொடர்பில், கூட்ட அறிக்கைகள் கூடத் தயாரிக்கப்பட்டன. முன்னைய கூட்டத்தின் கூட்ட அறிக்கை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டது.

இறுதியாகப் பதினேழாவது சுற்றுப் பேச்சுக்காக - முன்னரே தீர்மானிக்கப்பட்ட நேர அட்டவணை மற்றும் திகதி ஒழுங்கின்படி கூட்டமைப்புப் பிரதிநிதிகள் கொழும்பில் வழமையாகப் பேச்சு நடைபெறும் இடத்துக்குச் சென்று பார்த்திருந்தனர். காத்திருந்தனர். அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் வரவேயில்லை.

அது மாத்திரமல்ல, அதுவரை நடந்த 16 சுற்றுப் பேச்சுகளிலும் கூட்டமைப்புடன் கலந்துகொண்டது அரசுத் தரப்பல்ல, ஆளும் தரப்பின் பிரதான கட்சியான சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் குழுவே கலந்துகொண்டது என்ற புதுக்கதையும் - அறிவிப்பும் - கூட அரசுத் தரப்பில் இருந்து வெளியிடப்பட்டது.


இப்படி எல்லாம் “பேய்க்காட்டி விட்டுத்தான்” இப்போது, ஏதோ தனது ஆட்சிக் காலத்தில் தாம் கூட்டமைப்போடு பேசி, இணக்கம் கண்டு, அமைதித் தீர்வு ஒன்றை எட்ட முயற்சித்துக் காத்திருந்தார் என்றும் -

ஆனால், கூட்டமைப்பினர்தான் இணங்கி வரவேயில்லை என்றும் -

கதை ஒன்றைத் திரும்பத் திரும்ப விட முயற்சிக்கின்றார் மஹிந்தர்.

தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றை நல்லாட்சி அரசு வழங்குகின்றமையைத் தடுத்துக் குழப்பும் இனவாத அரசியல் மூலமே தென்னிலங்கையில் தாம் பறிகொடுத்த ஆட்சியதிகாரத்தை மீளக் காப்பற்ற முடியும் என்ற ஒரே இலக்கில் தற்போது செயற்படும் மஹிந்தருக்கு, சம்பந்தன் மீள இப்போதும் விடுத்துள்ள நீதியான - நேர்மையான - சமாதான அழைப்பு, கேட்கும் என்று நம்புவதற்கு இடமில்லை. அதுதான் முழு உண்மையும் கூட...!

# ஜப்பான் குழுவினருடன் அமைச்சர் ஹக்கீம் சந்திப்பு



கொழும்பு, டிசெ. 27

ஜப்பான் நாட்டின் காணி, அடிப்படை வசதிகள், போக்குவரத்து மற்றும் உல்லாசப் பயணத்துறை அமைச்சர் கெயிச்சி இசீ தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீமை அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது உத்தேச ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே மலக்கழிவு வடிகாலமைப்புத் திட்டம், கண்டி கழிவுநீர் முகாமைப்படுத்தல் திட்டம், களுகங்கை உவர் நீர் தடுப்பு மற்றும் நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பாகவும், திருகோணமலை நகர மற்றும் துறைமுக அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் பல்வேறு முக்கிய நீர் விநியோகத் திட்டங்களுக்கும் சுகநல பாதுகாப்பு மற்றும் கழிவுநீர் முகாமைப்படுத்தல் முதலான திட்டங்களுக்கு ஜப்பான் உதவி வருவதோடு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் ஜப்பானுக்கு மேற்கொண்ட விஜயத்தின் மூலம் ஜப்பானால் வழங்கப்படும் உதவிகள் விரைவுபடுத்தப்பட்டிருக்கின்றன எனவும், இலங்கை - ஜப்பான் நட்புறவு நீண்டகாலமாக இருந்து வருகின்றது எனவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதன்போது தெரிவித்தார்.

# ஜனவரி மாதத்தில் வழங்கப்படவுள்ளன அதிபர், ஆசிரியருக்கு சம்பள நிலுவைகள்!

கொழும்பு, டிசெ. 27

வடக்கு மாகாண அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இதுவரை வழங்கப்படாதிருந்த சம்பள நிலுவைகள் ஜனவரி மாதம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தகவலை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா.புவனேஸ்வரன் உறுதிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

நீண்டகாலம் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்படாதிருந்த பெருந்தொகை சம்பள நிலுவைகள் வழங்கப்படவேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்ட அனைவரிடமும் வேண்டுகோள் விடுத்திருந்தது.

அதன் அடிப்படையில் முதற்கட்டமாக ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவைகள் வழங்கப்பட்டன.

போதிய நிதியில்லாததால் கடமையில் உள்ளவர்களுக்கு ஜனவரி மாதம் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

இதன்படி, ஜனவரி மாதம் அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களுக்குமான சம்பள நிலுவைகள் வழங்குவதற்கான நிதி தற்போது கிடைத்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

இதற்காகப் பாடுபட்ட அனைவருக்கும் சங்கம் நன்றி தெரிவித்துக்கொள்கின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது.

# தேயிலை உற்பத்தித்துறைக்கு பெரும் பாதிப்பு ஏற்படவில்லை

## கொழும்பு தேயிலை வர்த்தக சங்கத்தின் தலைவர் தகவல்



இலங்கை மீதான ரஷ்யாவின் தேயிலை ஏற்றுமதித் தடை இரண்டு வாரங்கள் மாத்திரமே அமுலாகியது.

இதனால், தேயிலை உற்பத்தித் துறைக்கு பெரியளவிலான பாதிப்பு ஏற்படவில்லை என்று கொழும்பு தேயிலை வர்த்தக சங்கத்தின் தலைவர் ஆன்ஸ்லம் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொதி செய்யப்பட்டு அடைக்கப்பட்ட தேயிலைப் பெட்டிக்குள் பூச்சிகள் நுழைவதற்கான எந்த வாய்ப்பும் கிடையாது. இலங்கை வருடாந்தம் 30 கோடி கிலோகிராம் தேயிலையை ஏற்றுமதி செய்கிறது. இதன் மூலம் 150 கோடி ரூபா வருமானமாகக் கிடைக்கிறது.

20 லட்சம் பேர் தேயிலை உற்பத்தித்துறையில் தொடர்புபட்டுள்ளார்கள். இலங்கையின் தேயிலை மீது விதிக்கப்பட்ட தடையை நீக்க அரசாங்கம் எடுத்த முயற்சியை சங்கம் பாராட்டுகிறது என்றும் ஆன்ஸ்லம் பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை ரஷ்யா, இலங்கை தேயிலைக்கு நீக்கப்பட்ட தடை தொடர்பாக பெருந்தோட்டத்துறை கைத்தொழில் அமைச்சர் நவின் திசாநாயக்க கருத்து தெரிவிக்கையில்-

விசேடமாக ரஷ்யாவிற்கான இலங்கை தேயிலையை ஏற்றுமதி செய்யும் போது சிலோன் ரீ என்ற வர்த்தக நாமத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தேயிலையின் தரத்தை போன்று தூய்மையானதாக இருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதேபோன்று தடையை நீக்குவதற்காக பேச்சில் ஈடுபட்ட இலங்கை குழுவால் அந்நாட்டிலுள்ள இலங்கை தேயிலை களஞ்சியமும் கண்காணிக்கப்பட்டுள்ளது .

தொடர்ந்தும் இந்த நாட்டிலுள்ள தேயிலை களஞ்சிய சாலைகளின் சுத்தம் தொடர்பிலும் மிகவும் கவனத்தில் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யதயார்நிலையிலிருக்கும் தேயிலை களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தேயிலை எதிர்வரும் சனிக்கிழமை ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.

இலங்கையின் தேயிலை உற்பத்தித் துறைக்கு 150 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இந்தக் காலப்பகுதியில் இலங்கையின் தேயிலைக்கு சர்வதேச அங்கீகாரமும் கிடைத்துள்ளது. இலங்கையின் தேயிலை வரலாற்றில் முதல் தடவையாக தடை செய்யப்பட்ட சந்தர்ப்பம் இதுவாகும் என்றும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

### நாளை

28.12.2017
வியாழக்கிழமை

நட்சத்திரம் : அச்சுவினி மு.இ 8.32 வரை
திதி : தசமி மு.இ 7.32 வரை
சுபநேரம் : 7.58 – 9.28 வரை
இராகுகாலம்: 1.58 – 3.28 வரை

# இலங்கை மீதான கண்காணிப்பு அதிகரிக்கப்படும் என்கிறது ரஷ்யா!

கொழும்பு,டிசெ.27

இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தாவர உற்பத்திகள் மீதான கண்காணிப்பு அதிகரிக்கப் படும் என்று ரஷ்யாவின், விவசாய மற்றும் விலங்குகள் கண்காணிப்பு அமைப்பான, Rossel khoznadzor இன் தலைவர், சேர்ஜி டாங்க்வேர்ட் தெரி வித்துள்ளார்.

இலங்கையின் தேயிலை உள்ளிட்ட விவசாய விளைபொருள்கள் மீதான தற்காலிக தடை நீக்கப்பட்டுள்ளமை தொடர்பாக, ரஷ்யாவின் ஸ்புட்னிக்



நாளிதழுக்கு கருத்து வெளியிடும் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் இருந்து அனைத்து தாவர உற்பத்திகளையும் இறக்குமதி செய்வதற்கு கடந்த 18 ஆம் திகதியில் இருந்து Rosselkhoznadzor தடை விதித்திருந்தது.


இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேயிலைப் பொதியில், தானியங்கள் மற்றும் விதைகளுக்கு ஆபத்தான பூச்சியினமான கப்ரா என்ற வண்டு, கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே, இந்த தடைவிதிக்கப்பட்டது.

இந்தப் பூச்சி ரஷ்யாவுக்குள் நுழைந் தால், டசின்கணக்கான மில்லியன் டொலர் இழப்பு ஏற்படும் என்று மதிப் பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து, இலங்கையில் இருந்து எல்லா தாவர உற்பத்திகளையும் இறக்குமதி செய்வ தற்கு விதிக்கப்பட்ட தடையை, எதிர் வரும் 30ஆம் திகதியில் இருந்து நீக்க முடிவு செய்துள்ளோம்.

இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எல்லா தாவர உற்பத்தி கள் மீதான கண்காணிப்பும் அதிகரிக் கப்படும் என்றும் அவர் தெரிவித்துள் ளார்.

## கரையோரப் பிரதேசங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும்



கொழும்பு,டிசெ.27

கரையோரப்பிரதேசங்களில் இடியுடன் கூடிய மழை பெய் யக்கூடும் என்பதால் கடல் நடவடிக்கையில் ஈடுபடு வோர் அவதானத்துடன் செயற் படுமாறு இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித் துள்ளது.

இதேவேளை, வடக்கு, கிழக்கு, வடமத்தி, ஊவா மாகாணங்களிலும் அம்பாந் தோட்டை மாவட்டத்திலும் மழை பெய்யக்கூடும் என்றும் வளிமண்டல திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்திலும் நுவரெலியா, இரத்தினபுரி, காலி, மாத்தறை மாவட்டங் களிலும் சுமார் 75 மில்லிமீற்றர் மழை பெய்யக்கூடும்.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் மழை அல் லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

மன்னார் புத்தளம் ஊடாக கொழும்பு வரையிலான கரை யோரப் பிரதேசத்திலும் காலி மாத்தறை ஊடாக அம்பாந் தோட்டை வரையிலான கடற் பிரதேசம் ஓரளவு கொந்தளிப் புடன் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்பகுதியில் கொந்தளிப் புடன் காணப்படும் பிரதேசங் களில் 70 கிலோமீற்றருக்கும் 80 கிலோமீற்றருக்கும் இடைப் பட்ட வேகத்தில் தற்காலிகமாக காற்றுவீசக் கூடும் என்றும் திணைக்களம் தெரிவித்துள் ளது.

## மஹிந்த வேறு கட்சியின் தலைவராக முடியாது!

### மஹிந்த அமரவீர தெரிவிப்பு



ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் உறுப்புரிமையை வகித்துக் கொண்டு முன்னாள்ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேறு கட்சியின் தலைமைப் பொறுப் பை ஏற்றுக்கொள்ள முடியாது.

அவ்வாறு செயற்பட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டிவரும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் பொதுச்செயலாளர் மஹிந்த அமரவீர தெரிவித் துள்ளார்.

கட்சியின் கொள்கைக்கு அமையவே அனைவரும் செயற்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் ஆலோசகரும் சிரேஷ்ட உறுப் பினருமான முன்னாள் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்காபொதுஜனமுன்னணி யின் தலைமைப் பொறுப்பை ஏற்கப்போகிறாள்ணக்கூறப்படும் நிலையில் இது குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் சிரேஷ்ட உறுப்பினரும் ஆலோசகருமாக இருக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேறு கட்சிக்கு தலைமை தாங்குகிறார் என எந்தவித உத்தியோகபூர்வ தகவலும் கிடைக்கவில்லை.

பொதுஜன முன்னணியின் எந்தவொரு பொறுப்பையும் அவர் இதுவரையில் வகிக்க வில்லை. எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்த வர் ஒருவர் கட்சியின் கொள் கைக்கும் தலைமைத்துவத் திற்கும் முரணான வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்க்கட்சியின் அங்கத்து வத்தை ஏற்றுக்கொண்டால் அவர் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக கட்சி, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக் கும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இல்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன முன் னணி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சிக்கு முரணாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை விமர்சிக்கும் நடவடிக்கைகளை எடுக்கும் நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நபர்கள் பிரதிநிதித் துவப்படுத்தினால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இதில் மாற்றுக் கருத்து இல்லை. முன்னாள் ஜனாதிப திக்கும் இந்த விதிமுறை பொருந்தும். எனவே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்துவத்தை வைத்துக் கொண்டு வேறு ஒரு முரண் பாடான கட்சிக்குத் தலைமை பொறுப்பை வகிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

## குப்பை அகற்றும் பணிகளை ஒழுங்கு படுத்த நடவடிக்கை

குப்பை அகற்றும் பணி களை அடுத்த வருடம் மேலும் ஒழுங்குபடுத்தவுள்ளோம் என தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ மத்திய நிலை யத்தின் பணிப்பாளர் ஏ.டீ. இலங்கசிங்க தெரிவித்துள் ளார்.

அரசு இதற்காக 80 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. உட்பாதைகளில் குப்பை கூளங்களை ஒழுங்கான முறை யில் அகற்றுவதற்காக உள்ளூ ராட்சிமன்ற நிறுவனங்களுக்கு வாகனங்களையும் உபகரணங் களையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நாளாந்தம் 50 மெற்றிக் தொன் சேதனப்பசளையை உற்பத்தி செய்யக்கூடிய மத் திய நிலையங்கள் மாகாண மட்டத்தில் ஆரம்பிக்கப்பட வுள்ளன. அடுத்த வருடம் இந்தப் பணி மேலும் விரிவு படுத்தப்படும் என்று இலங் சிங்க மேலும் குறிப்பிட்டார்.




## நீதிபதியைத் திட்டிய மூன்று பேர் கைது!

கொழும்பு, டிசெ.27

நுவரெலிய, ஹட்டன் மஜிஸ்ட்ரேட் சரவண ராஜாவைத் திட்டிய மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள் ளனர்.

மஜிஸ்ட்ரேட் சரவண ராஜா ஏ-9 வீதியில் பய ணித்துக் கொண்டிருக் கும் போது கடந்த 23 ஆம் திகதி இரவு அவரது வாகனத்தைத் தொடர்ந்து மற்றொரு வாகனத்தில் வந்த மூவர் நீதிபதியை யும், அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர்களை யும் ஏசிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு சென்ற இனந் தெரியாத நபர்கள் நேற்றுமுன்தினம் கெக் கிராவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள் ளனர். இவர்கள் பய ணித்த வாகனமும் பொலிஸாரினால் கைப் பற்றப்பட்டுள்ளது என் றும் கூறப்படுகின் றது.

## இளைஞர் சமூகத்தை விவசாயத்துறையில் ஈடுபடுத்த நடவடிக்கை!

கொழும்பு, டிசெ. 27

இளைஞர் சமூகத்தை விவசாயத்துறையில் ஈர்ப் பதற்காக நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் மற் றும் புதிய நடைமுறைகளைப் பயன்படுத்தும் மாதிரி கிராமங்கள் பல நாட்டில் அமைப்பதற்கு அரசு தீர்மா னித்துள்ளது.

இதன்மூலம் 6ஆயிரத்து 500 இளைஞர், யுவதி களுக்கு விவசாயத்தொழில்துறை தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

உற்பத்தி தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் சேதனைப் பசளை பயன்படுத்தி விவசாயத் துறையுடன் தொடர்புபட்ட 15ஆயிரம் விவசாயி களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை சர்வதேச சந்தைக்கு சமர்ப்பிப்பதற்கான சான்றிதழ் வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

(க)



காலைக்கதிர் Kalaikkathir



# சுனாமிப் பேரிடர் நினைவேந்தல் நிகழ்வுகள்

## வடமராட்சி கிழக்கு உடுத்துறையில்...






## மட்டக்களப்பு கல்லடியில்...





## ஒந்தாச்சிமடத்தில்...





## முல்லைத்தீவில்...





## மன்னாரில்...






## வவுனியாவில்...

# உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் உறவுகளுக்கு மலர் தூவி, தீபம் ஏற்றி அஞ்சலி!





கொழும்பு, டிசெ. 27

சுனாமிப் பேரலையால் உயிரிழந்த உறவுகளின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று தமிழர் தாயாகம் எங்கும் உறவுகளால் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்த நிலையில், வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் நேற்றுக் காலை நினைவேந்தல் இடம் பெற்றது.ஆழிப் பேரலையால் உயிரிழந்த வர்களுக்கு உறவுகள் மலர் தூவி, தீபம் ஏற்றி அஞ்சலித்தனர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி காலை 9.25 மணியளவில் இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் 30 கி.மீ. ஆழத்தில், ரிச்டர் அளவில் 9.1என்ற அளவுக்கு பூகம்பம் ஏற்பட்டது.

இதையடுத்து எழும்பிய ஆழிப்பேரலைகள் இந்தோனேஷியா, இந்தியா, மியான்மர், மலேஷியா, இலங்கை, தாய்லாந்து உட்பட 14 நாடுகளில் கடும் சேதத்தை ஏற்படுத்தியது. இலங்கையைப் பொறுத் தமட்டில் இந்த ஆழிப்பேரலை யனால் கரையோரப்பிரதேசங்கள் பெரிய சேதத்தை எதிர்கொண்டன.

இலங்கையில் மட்டும் சுமார் 35 ஆயிரம் பேர் ஆழிப்பேரலையால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(ப)

# மட்டு. கல்லடியில் சுனாமி நினைவஞ்சலி



கொழும்பு, டிசெ. 27

சுனாமி அனர்த்தம் காரணமாக உயிரிழந்த உறவுகளின் 13 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, மட்டக்களப்பு மாவட் டத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்படி, மட்டக்களப்பு மாவட்டத்தில் பல உயிர்கள் சுனாமி அலைகளால் காவு கொள்ளப்பட்ட, கல்லடி, திருச்செந்தூர் பகுதியில் நேற்று காலை அஞ்சலி நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன.

திருச்செந்தூர் வாழ் பொது மக்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு– அம்பாறை மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் இந்து இளைஞர் பேரவையின் தலைவருமான சீ.யோகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# சுனாமியில் இறந்தவர்களுக்கு மலையகத்தில் நினைவு கூர்வு

கொழும்பு, டிசெ. 27

சுனாமி ஆழிப்பேரலை இடம்பெற்று நேற்றுடன் 13 ஆண்டுகள் நிறைவடைந்தமையை நினைவு கூரும் வகையில் உயிரிழந்த உறவுகளுக்கு மலையக மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி தெற்காசிய வரலாற்றில் மிகவும் துயரகரமான நிகழ்வாகக் காலை 9.25 மணியளவில் ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்றது.

இந்த ஆழிப்பேரலை அனாத்தம் காரணமாக இலங்கை, தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, மற்றும் இந்தியா உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டோர் பலியானார்கள்.

அந்தவகையில் இந்த அனர்த்தத்தில் உயிர்நீத்த இலங்கை உறவுகளுக்கு தமது அஞ்சலியை மலையக மக்களும் செலுத்தினர்.ஹற்றன் பொலிஸார், நகர வர்த்தகர்களின் ஏற்பாட்டில் ஹற்றன் புத்தர் சிலைக்கு முன்னால் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் ஹற்றன் நகரில் உள்ள வங்கி ஊழியர்கள், நகர வர்த்தகர்கள், சாரதிகள் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் என அனைவரும் கலந்துகொண்டனர்.

# ஸைனிஸ் வி. க. ஏற்பாட்டில் கல்முனையில் சுனாமி நினைவு தினம் அனுஷ்டிப்பு



மட்டக்களப்பு, டிசெ. 27

சுனாமி ஆழிப்பேரலையை நினைவுகோரும் முகமாக நேற்று கல்முனை மாமாங்கம் மைதானத்தில் அமையப் பெற்றுள்ள சுனாமி நினைவுத் தூபியில் கல்முனை ஸைனிஸ் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் சுனாமி நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுக் கல்முனையில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. சுடர் ஏற்றப் பட்டு மலர் துவி இறந்த உறவுகளுக்கான அஞ்சலி செலுத்தப்பட்டது.

மட்டக்களப்பு கல்முனை கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் மாத்திரம் சுனாமி ஆழிப்பேரலை காரணமாக 596 பேர் பலியாகினர்.

சுனாமியில் இறந்தவர்களின் நினைவாக கல்முனையில் இறந்தவர்களின் பெயர்கள்பொறிக்கப்பட்டதூபிஅமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

# சுனாமியில் உயிர் நீத்த மக்களுக்காக முல்லையில் ஆத்மசாந்திப் பூஜைகள்!



முல்லைத்தீவு, டிசெ. 27

சுனாமி ஆழிப்பேரலையில் உயிர்நீத்த பொது மக்களுக்கான ஆத்ம சாந்திப் பூஜைகள் நேற்று முல்லைத்தீவில் இடம்பெற்றன.

2004 ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பகுதிகளை சுனாமி பேரலை தாக்கியது.இதனால், பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

அவ்வாறு உயிரிழந்த பொது மக்களுக்கு ஆண்டு தோறும் பல்வேறு இடங்களில் அஞ்சலி செலுத்தப் பட்டு வருகின்ற நிலையில் நேற்று முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்திலும் அஞ்சலி செலுத்தப் பட்டது.

இதில் சகல மத வழிபாட்டு பூஜைகளும் நடத்தப் பட்டன. இதில் பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி ஈகச் சுடரேற்றி மலர்தூவி உணர்வு பூர்வமாக வணக்கம் செலுத்தினர்.

சுனாமி ஏற்பட்டு 13 வருடங்கள் கடந்திருந்தாலும் நேற்று வரை அதன் தாக்கம் மற்றும் சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புகள் தமது மனதில் இருந்து நீங்கவில்லை, இனியும் நீங்காது எனக் கலந்துகொண்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

(க)

# மண்முனை ஒந்தாச்சிமடத்தில் சுனாமி நினைவேந்தல் நிகழ்வு!



மண்முனை, டிசெ. 27

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்திற் குட்பட்ட ஒந்தாச்சிமடத்தில் சுனாமி பேரலையால் உயிர் நீத்த உறவுகளின் 13 ஆண்டு நிறைவையொட்டி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு அக் கிராம மக்களின் ஏற்பாட்டில் கிராமத் தலைவர் சற்குணம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வு இக் கிராமத்தில் இருந்து உயிர் நீத்த 44 உறவுகளின் நினைவாக கடற்கரை வீதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி முன்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மதகுருமார், பொதுமக்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர், சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்களை சார்ந்த பிரதி நிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

உயிர் நீத்த உறவுகளின் உறவினர்கள் விளக்கேற்றி அஞ்சலிசெலுத்தினா்.அத்துடன், அஞ்சலி உரையும் நிகழ்த்தப்பட்டது.

(ப)

காலைக்கதிர் Kalaikkathir



# மஹிந்தவின் வேட்பாளராக ஊழல்வாதிகளும் கிரிமினல்களும்

## எஸ்.பி.திசநாயக்க குற்றஞ்சாட்டுகிறார்

மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு சிறிலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளர் பட்டியலில், குற்றவாளிகளும், ஊழல் செய்தவர்களும் இடம்பெற்றுள்ளனர் என அமைச்சர் எஸ்.பி. திசநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற பொது நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போத அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொலைக் குற்றவாளிகளும், பெண்களைவன்புணர்ந்த குற்றச்சாட்டில் கட்சியை விட்டு நீக்கியவர்களும், மலர் மொட்டு சின்னத்தில் போட்டியிடுகின்றனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட சபைகளில், சிறிலங்கா பொதுஜன முன்னணிக்கு ஆதரவு அளிக்கப்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தினசரி ராசி பலன் 27.12.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மார்கழித்திங்கள் 12ஆம் நாள் புதன்கிழமை நவமித் திதி பி.இ.1.55மணி வரை பின்னர் தசமி. நட்சத்திரம் ரேவதி பி.இ.1.36 மணிவரை பின்னர் அசுவினி.மரணயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** *-பகல் 12.11 மணி முதல் 1.37 மணி வரை*

**சுபநேரம்** *-மாலை05.03மணிமுதல் 06.33 மணி வரை*

**திவசம்செய்யவேண்டியதிதி**- *மார்கழிமாதவளர்பிறைநவமி*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *ரேவதி*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** சஞ்சலமான நாள். பணவரவு குறைவடையும். குடும்பத்தில் சலசலப்பு உண்டாகும். வியாபாரம் மந்த கதியில் நடக்கும். வெளிவட்டாரப் பழக்கத்தில் கவனமாக இருப்பது நன்மையைத் தரும்.

**ரிஷபம்** : நன்மையான நாள். குடும்ப உறவில் அந்நியோன்யம் அதிகரிக்கும். இதுவரை மந்தகதியில் சென்று கொண்டு இருந்த பணிகள் சுறுசுறுப்பாக நடக்கும்.

**மிதுனம்** : சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். உடலும், மனமும் சோர்வடையும். எனவே எந்தச் சூழலிலும் பதற்றப்படாமல் இருப்பது நல்லது. வியாபாரம் சுமாராக இருக்கும்.

**கடகம்** : யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். சுயதொழிலில் ஈடுபடுவோருக்கு சீரான வளர்ச்சி கிட்டும்.உறவுகளுக்கு உதவி மகிழும் வாய்ப்பு கிட்டும். நினைத்த காரியம் கைகூடும்.

**சிம்மம்** : சலனம் மிகுந்த நாள். மனச்சஞ்சலம் அதிகரிக்கும். பிள்ளைகளைப்பற்றிய கவலை மனதை கிட்டும். வருமானம் குறையும். வீண்செலவுகள் உண்டாகும். தாயாரின் உடல்நிலை பாதிப்படையும்.

**கன்னி** : மத்திமமான நாள். வருமானம் சுமாராக இருக்கும். தேவையற்ற செலவுகளால் கடன்படும் நிலை உண்டாகும். தேகநலம் பாதிப்படையும். எடுக்கும் கருமங்கள் தடை தாமதமடையும்.

**துலாம்** :சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி காணப்படும்.

**விருச்சிகம்** : இனிமையான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் இனிய சூழல் நிலவும். உத்தியோகத்தில் பெரிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள். உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதை கிடைக்கும்.

**தனுசு** : கவலையான நாள்.பணவரவு குறையும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிப்பால் வருமானம் குறையும். வெளிநாட்டுப்பயணம்செல்ல முயன்றோர் ஏமாற்றமடைவார்கள்.

**மகரம்**:சமபலன்கள் காணப்படுகின்றன. வியாபாரத்தின் பாக்கிகளை வாடிக்கையாளர்களுடன் போராடி வசூலிப்பார்கள். தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புகளை சிரமப்பட்டுப் பெறுவார்கள்.

**கும்பம்**:உயர்வான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் இருந்த பணிப்போர் விலகும். இவர்களின் முக்கியத்துவம் அதிகரிக்கும்.

**மீனம்** : நன்மையான நாள். பொருளாதாரம் மேன்மை அடையும். வியாபாரத்தில் கூடுதலான முதலீடு செய்வார்கள். எதிர்பார்த்த வேலை தடையின்றி முடியும். உடலில் சுறுசுறுப்பு, தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**சந்திராட்டமநாள்: மகம்,பூரம்,உத்தரம் 1 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்களிலல் ஈடுபடுவதை தவிர்க்கவும்.**

# கொள்கைகள் மட்டுமே மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி ...)

'வாரத்துக்கொரு கேள்வி – பதில்! என்ற தலைப்பில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விகளுக்குவாரம்தோறும்பதிலளித்து வருகின்றமை தெரிந்ததே.

அவரதுகேள்விபதில்விவரம் வருமாறு :–

சென்றமூன்றுவாரங்களாக சில பல காரணங்களுக்காக வாரத்துக்கான கேள்வி தேர்ந்தெடுக்கப்பட்டு பதிலிறுக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ள முதல்வர் விக்னேஸ்வரன்:– இவ்வாரத்துக்கான கேள்வி பதிலிலேயே மேற்படி விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். அந்தக கேள்வி – பதில் விவரம் வருமாறு:–

**கேள்வி:** நீங்கள் உங்கள் கட்சிக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றீர்கள் இல்லை என்ற குற்றச்சாட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் முன்வைக்கப்பட்டுள்ளது. உங்கள் நடவடிக்கைகள் மீண்டும் வன்முறையைத் தோற்றி விடுமோ என்ற பயம் தெற்கில்எழுந்துள்ளது. உங்கள் பதில் என்ன?

**பதில்:** என் கட்சி என்ன? என்னைப் பொறுத்த வரையில் எனக்கென்று கட்சி ஒன்றில்லை. என்னுடைய ஒத்த கருத்துடையவர்கள் தமிழ் மக்கள் பேரவை என்ற நாமத்துடன் ஒரு மக்கள் இயக்கமாகப் பரிணமித்துள்ளார்கள்.

நான் எந்தக் கட்சியையும் நாடிச் செல்லவில்லை. எந்தக் கட்சியின் ஆண்டுசந்தாப் பணத்தைக்கட்டிவிடுபவனும் அல்லன். எந்தக் கட்சியும் என்னைத்தமது கூட்டங்களுக்கு அழைத்து வரவுமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டமொன்று திருகோணமலையில் சில வருடங்களுக்கு முன்னர் நடந்த போது 8 பேர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அதன்பின் அக்குழுவிற்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை.

கட்சி அரசியல் எதுவும் வேண்டாம்என்றிருந்த என்னை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் ஐந்து கட்சிகள் சேர்ந்த தலைவர்கள் ஒருங்கே வந்து வலிந்து கேட்ட போது மறுக்க முடியாமல் அரசியலில் கால் வைத்தேன். நான் சேர முன் வந்தது அந்த ஐந்து கட்சிகள் சேர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள்ளேயே. அப்போது அது பதிவு செய்யப்படாத ஓர் அரசியல் கூட்டமைப்பு என்பது கூடத் தெரியாதிருந்தது.

சேர்ந்தபோது தான் பலதும் வெளிவந்தன. ஆனால்முன்னர் வன்முறை சாராத கட்சி என்ற வகையில் இயற்கையாகவே இலங்கைத்தமிழரசுக்கட்சியுடன் தான் எனது தொடர்புகள் சார்ந்திருந்தன. 2013ஆம் ஆண்டின் தேர்தல் விஞ்ஞாபனம் எனக்குத் தரப்பட்டது. அதில் உள்ள கொள்கைகள் எனக்குச் சரியெனப்பட்டன. எனவே அதனை அடிப்படையாகக் கொண்டு என் அரசியல் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்டேன். ஆனால் வெகு விரைவில் ஒன்றை உணர்ந்து கொண்டேன். விஞ்ஞாபனக் கொள்கைகளுக்கும் விரவியிருந்த யதார்த்த நிலைக்கும் இடையில் பெரிய விரிசல் இருந்ததை நான் உணர்ந்தேன். கொள்கைகள் மக்களுக்கு ஆனால் அரசியல் கொடுக்கல் வாங்கல்கள் கட்சித் தலைமைப் பீடங்களுக்கே என்பது தான் யதார்த்தமாக இருந்தது. இந்தக் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட முடிவுகள் எந்தவித கூட்டுக் கருத்துப் பரிமாற்றத்தின் அடிப்படையில் எடுக்கப்படவில்லை என்பதையும் கண்டு கொண்டேன். நடைமுறை நலன்கள் எவ்வாறு அமைந்தனவோ அவற்றை முன்வைத்தே தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அங்கு சுயநலமே கட்சித் தலைமைப்பீடத்தால் கருத்துக்கெடுக்கப்பட்டது என்பதையும் உணர்ந்து கொண்டேன். உதாரணத்திற்கு தேர்தல் விஞ்ஞாபன சிந்தனைக்கேற்ப இனப்படுகொலை சம்பந்தமான பிரேரணை கொண்டுவரப்பட்டு எமது வடமாகாண சபையால் 10/02/2015 இல் ஏகமனதாக ஏற்கப்பட்ட போது கட்சித் தலைமைத்துவம் அதிர்ச்சி அடைந்ததை நான் கண்டேன். அது சம்பந்தமான தலைமைத்துவக் கருத்துக்கள் முன்னுக்குப் பின் முரணாக அமைந்ததையுங் கண்டு கொண்டேன். பின்னர் தான் அறிந்து கொண்டேன் சிலருக்கு வரவிருந்த சுயநல வரவுகள் சில அந்தப் பிரேரணையால் பறிபோனதென்று.

நாங்கள் மக்களிடம் வாக்கு கேட்கும் போது எமது கொள்கைகளை முன் வைத்தே கேட்கின்றோம். என்னைப் பொறுத்த வரையில் அவற்றை மாற்றி, குறைத்தோ கூட்டியோ நாங்கள் அரசாங்கத்திடம் எமது கோரிக்கைகளை முன் வைப்பது என்றால் அது மக்களின் கருத்துக்கிசைவாக நடைபெற வேண்டும். ஆகக் குறைந்தது கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களின் கருத்தொருமிப்பின் அடிப்படையில் அவ்வாறான முரண்பட்ட கோரிக்கைகள் முன் வைக்கப்பட வேண்டும். ஏன் என்றால் நாங்கள் மக்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள். அவர்கள் நலம் சார்ந்தே நாங்கள் அரசியல் ரீதியாக நடந்து கொள்ள வேண்டும். தான்தோன்றித்தனமாக சுயலாபம் கருதி நடவடிக்கைகளை எடுக்கக் கூடாது.

ஆனால், அவ்வாறு தலைமையே கூட்டுக் கட்சியின் கொள்கைகளை உதாசீனம் செய்யும் போது ஒருவர் என்ன செய்ய வேண்டும்? ஒன்று வெளியேற வேண்டும். வெளியேறினால் உதாசீனம்செய்து நடந்து கொள்பவர்கள் கை ஓங்கிவிடும். இது எமது மக்களையே பாதிக்கும். மக்கள் பெருவாரியாக என்னைத் தேர்ந்தெடுத்தபோது இலங்கைத் தமிழரசுக் கட்சியினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் ஒட்டு மொத்த கொள்கைகளின் அடிப்படையில் தான் தேர்ந்தெடுத்தார்கள். அவற்றிலிருந்து ஒரு கட்சியின் தலைமைத்துவம் வழுக முற்படும் போது கட்சியின் நடவடிக்கைகளை மக்கள் சார்பாக மாற்ற எத்தனிப்பதே எமது கடமை என்று உய்த்துணர்ந்தேன்.

கட்சித் தலைமைத்துவம் கட்சிக் கொள்கைகளை மாற்றும்போது உபயோகிக்கும் கருவி தான் கட்சி ஒழுக்கம் என்ற பிரம்பு. நாங்கள் சொல்வதை நீங்கள் செய்யுங்கள். இல்லையேல் அடுத்த முறை உங்களுக்குக் கட்சித் துண்டு கிடைக்காது என்பார்கள் அல்லது நாங்கள் சொல்வதை நீங்கள் மக்களுக்கு எடுத்துச்சென்றீர்கள் என்றால் அடுத்த முறை உங்களுக்குத் துண்டு நிச்சயம் என்பார்கள். அவ்வாறு கூறி உறுப்பினர்களைச் சதி வேலைகளில் ஈடுபடுத்தியமையும் உண்டு. தலைமையுடன் முரண்பட்டால் கட்சி ஒழுக்கத்தை மீறியமைக்குக் காரணம் கேட்பார்கள். இந்தப் பின்னணியில் தான் உங்கள் கேள்விக்கு நான் பதிலளிக்க வேண்டும்.

நான் என் கட்சியை அடையாளப்படுத்துங்கள் என்று ஏற்கனவே உங்களிடம் கேட்டுள்ளேன். இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குக் கட்டுப்பட்டு நான் நடக்கவில்லை என்று கூறும் போது அதே கட்சியின் கொள்கைக்குக் கட்டுப்படாத கட்சித் தலைமைத்துவத்துக்கு நான் என்ன பதில் கூற முடியும்? என்னை கட்சிக் கூட்டங்களுக்கு அழைத்திருந்தால் எமது முரண்பாடுகள் பற்றிக் கூறியிருப்பேன். அது நடைபெறாத நிலையில் எமது கொள்கை ரீதியான விடயங்களை வெளிப்படையாக மக்களுக்குக் கூறு வதே எமது கடமை என்று நான் நினைத்தேன். அதையே செய்தும் வருகின்றேன்.

தவறிழைக்கும் கட்சித் தலைமைப்பீடம் தங்களைச் சரியான வழிக்கு மாற்றாமல் என்னைக் குறை கூறுவது விசித்திரமாக இருக்கின்றது. தற்போதைய உள்ளூராட்சித் தேர்தலுக்கு எந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தை முன் வைத்து இலங்கைத் தமிழரசுக் கட்சி வாக்குக் கேட்கின்றது என்பதைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். அப்பொழுது தான் கட்சித் தலைமைத்துவத்திடம் சில கேள்விகளை மக்கள் கேட்கலாம். அதாவது, எமக்கு ஒன்றைக் கூறி அதற்கு மாறாக அரசாங்கத்துடன் நீங்கள் நடந்து கொள்ளும் நடவடிக்கையின் பின்னணி என்ன? நெருக்குதல்கள் காரணம் எனின் யாரால் ஏற்படுத்தப்பட்ட நெருக்குதல்கள்? என்று இன்னோரன்ன கேள்விகளை மக்கள் கேட்க வழிவகுக்க வேண்டும். அதை விட்டுவிட்டு நாம்தான் தலைமை! நாம் முடிவெடுத்து விட்டோம். அது வழி நடவுங்கள் அல்லது சீட்டுமில்லை சிறப்புமில்லை என்று கூறுவது ஜனநாயகம் ஆகாது. அவ்வாறான நடவடிக்கைகள் தமிழ் மக்களின் நலஞ் சாராது. ஆகவே, தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்திற்கு நான் கூறும் பதில் பல தடவைகள் சிறை சென்ற போது நீங்கள் கொண்டிருந்த உறுதியான கொள்கைகளில் இருந்து நீங்கள் வழுவி விட்டீர்களா? ஏன்? பிறழ்வான கொள்கைகளுக்கு என்னைப் பணியச் செய்வதில் உங்களுக்கென்ன இலாபம்? உங்கள் கொள்கைகளைப் பழையபடி உறுதியாக எடுத்தியம்பி நிலையான தமிழரசுக் கட்சிக் கொள்கைகளுக்கு நீங்கள் இன்னமும் விசுவாசமாக இருக்கின்றீர்கள் என்று பகிரங்கமாக அறிவியுங்கள். இடைக்கால அறிக்கையின் போதாமை பற்றிப் பிரஸ்தாபியுங்கள். எவ்வெவற்றை நாங்கள் அரசியல் ரீதியாகப் பெறவேண்டும் என்பதைப் பகிரங்கமாக அறிவியுங்கள். அவை கட்சியின் 2013ஆம் ஆண்டின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு ஏற்புடையதாக இருந்தால் நான் கட்சி கூறுவதற்குக் கட்டுப்படுவேன்.

அடுத்து மீண்டும் வன்முறை வெடிக்கும் சாத்தியம் பற்றியது.

உண்மையைக் கூறினால் வன்முறை வெடிக்கும் என்று கூறுவதின் அர்த்தம் ஒருவர் மிரட்டினால் அடங்கிப் போங்கள்

(19 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் வெளி ஆசிரியர்களையே நம்பியுள்ளது!

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கற்பிப்பவர்களில் 78 வீதமான ஆசிரியர்கள் வெளி இடங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் இதனால் மற்றவர்களை நம்பியே வலயம் இருக்கின்ற நிலை தற்போது உள்ளது எனவும் மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் தெரிவித்துளார்.



கொக்கட்டிச்சோலை மக்கள் நல இளைஞர் மன்ற உதவும் உறவுகள் அமைப்பின் ஏற்பாட்டில், கற்றல் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதில் இடர்படுகின்ற மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் சேவையாற்றும் ஆசிரியர்களில் 78வீதமான ஆசிரியர்கள் வெளியிடங்களைச் சேர்ந்தவர்களாகவும், 22 வீதமானவர்களே மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் ஏனைய பிரதேசத்தைச் சேர்ந்தவர்களை நம்பியே எமது வலயம் இருக்க வேண்டிய நிலையிருக்கின்றது. இவற்றை மாற்றியமைக்க வேண்டும். இதற்காக இப் பிரதேசத்தில் ஆசிரியர்கள் உருவாக வேண்டும். இதற்கு இங்குள்ள மாணவர்கள் சிறப்பாகக் கற்க வேண்டும். பரீட்சைகளில் சிறந்த தேர்ச்சியை அடையவேண்டும். இதற்கு பெற்றோர்களின் பங்கு அளப்பெரியது. பெற்றோர்களின் அக்கறையீனமும், மாணவர்களின் கல்வி பின் நிலைக்குச் செல்வதற்குக் காரணமாக இருக்கின்றதென்பதை மாணவர்களின் வரவு வீழ்ச்சி எடுத்துக்காட்டுகின்றது.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட மாணவர்களின் அறிவு மட்டம், ஏனைய நகர வலயங்களில் உள்ள மாணவர்களின் அறிவுமட்டத்திற்கு ஏற்றாற்போல் காணப்படுகின்றது. ஆனால், மாணவர்களின் வரவுக் குறைவும், பெற்றோர்களின் அக்கறையீனமும், மாணவர்களின் அக்கறையீனமுமே கல்வியில் பின்நிலையில் நிற்பதற்குக் காரணமாக இருக்கின்றன என்று தெரிவித்துள்ளார்.



இந்த நிகழ்வில், மண்முனை தென்மேற்குப் பிரதேசசெயலக சமூக சேவை உத்தியோகத்தர் சி.குணசேகரம், கிராமசேவை உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அமைப்பின் தலைவர் வே.அன்பழகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மண்முனை தென்மேற்கு பிரதேசத்திற்குட்பட்ட 150 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப)

# திருமலையில் இருவர் கைது!

திருகோணமலை,டிசெ.27

திருகோணமலை - புல்மோட்டை பகுதியில் இருந்து கிண்ணியாப் பகுதிக்குச் சட்ட விரோதமான முறையில் சிற்பிகளை எடுத்துச் சென்ற இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புல்மோட்டை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இரண்டு இளைஞர்களே நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் புல்மோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒட்டோ ஒன்றில் சட்டவிரோதமான முறையில் சிற்பிகள் எடுத்துச் செல்கின்றனர் எனப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளோம் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ப)

# சடலம் மீட்பு

அம்பாறை,டிசெ.27

அம்பாறையில் 19 வயதுடைய இளைஞன் ஒருவன் தவறான முடிவெடுத்து உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளான்.

அம்பாறை சுதுவெல்ல பிரதேசத்திலே இளைஞனின் சடலம் நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பாறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப)

# கல்முனையில் சுனாமி நினைவுதினம் அனுஷ்டிப்பு

கல்முனை - மாமாங்கம் மைதானத்தில் உள்ள சுனாமி நினைவுத்தூபியில் சுனாமி நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு கல்முனை சமூக சேவையாளர் சந்திரசேகரம் ராஜன் அனுசரணையில் கல்முனை சைனிங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றது.

கல்முனை சுபத்ரா ராமய விகாராதிபதி, வண.ரண்முத்துக்கல மற்றும் சங்கரத்ன தேரர் ஆகியோரால் சுனாமி சுடரேற்றப்பட்டது.

கல்முனை கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் மாத்திரம் 596பேர் சுனாமியால் உயிரிழந்திருந்தனர்.

சுனாமியில் தமது உறவுகளை இழந்தோரும், பெருந்திரளான பொதுமக்களும் இந்தச் சுனாமி நினைவு தினத்தில் தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். (ப)









தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா



# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?"

386

மத்திய கிழக்கில் ஒரு புதிய குட்டி-அரசை உருவாக்கும் முதலாளித்துவ தேசியவாத வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அமைந்த பலஸ்தீன தேசியவாதமே கூட, பலஸ்தீன மக்களின் ஜனநாயக மற்றும் சமூக அபிலாஷைகளை எட்ட முற்றிலும் தகைமையற்றது என்பதை நிரூபித்துள்ளது. அதற்குப் பதிலாக, அது பலஸ்தீன ஆணையத்தைத்தான் உருவாக்கியது. இது வெளிநாட்டு உதவி ஒப்பந்தங்கள் மற்றும் சிஐஏ உதவி நிதிகளில் ஊட்டம் பெறும் அப்பாஸ் மற்றும் அவரது சக அதிகாரிகள் மற்றும் மில்லியனர்களுக்கு அப்பாற்பட்டு யாருடைய நலன்களையும் பிரதிநிதித்துவம் செய்யவில்லை. அதேவேளையில் ஆக்கிரமிப்பு பகுதியில் எழும் எதிர்ப்பை ஒடுக்கி வருகிறது.

பாலஸ்தீனர்கள் அனுபவித்த



தசாப்த கால ஒடுக்குமுறை, வறுமை மற்றும் வன்முறைக்கு முடிவு கட்டுவதும், ஒரு பிராந்திய அளவிலான போர் அபாயத்தை நிறுத்துவதும் தொழிலாள வர்க்கத்தின் பணியாகும். ஏகாதிபத்தியத்திற்கு எதிரான மற்றும் அதன் உள்ளூர் முகவர்களான இஸ்ரேல் மற்றும் அரபு இரண்டுக்கும் எதிரான ஒரு பொதுவான போராட்டத்தில், எல்லா தேசிய மற்றும் மத எல்லைகளையும் கடந்து தொழிலாள வர்க்கம் அதன் பலத்தை ஐக்கியப்படுத்த வேண்டும்.

அப்பிராந்தியத்தில் மேலாதிக்கம் செய்துள்ள அரசியல் கன்னைகளின் உடைவு, தீர்க்கவியலாத முதலாளித்துவ நெருக்கடியால் எரியூட்டப்பட்டுள்ள இது, இப்புவியெங்கிலும் முதலாளித்துவத்திற்கு முடிவு கட்டும் போராட்டத்தின் பாகமாக, மத்திய கிழக்கின் சோசலிச கூட்டமைப்புக்கான போராட்டத்தில் யூத மற்றும் அரபு தொழிலாள வர்க்கத்தை ஐக்கியப்படுத்த வேண்டியதன் அவசரமான அவசியத்தை முன்நிறுத்துகிறது.

## பாலியல் முறைகேடு மீதான வேட்டையாடலுக்கு எதிர்ப்பு

பாலியல் ஒழுக்கக்கேடு மீது குற்றச்சாட்டும் பிரசாரம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள நிலையில், இதில் என்ன சம்பந்தப்பட்டுள்ளதோ அது ஆரம்பத்தில் வெளிப்பட்டதை விட -அதாவது ஹொலிவுட் தயாரிப்பாளர் ஹார்வே வைன்ஸ்டீனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விட- மிகப் பெரியளவிலானவை சம்பந்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. ஆரம்ப அதிர்ச்சி குறையத் தொடங்கி உள்ள நிலையில், இலக்கில் வைக்கப்பட்ட சிலரிடம் இருந்து எதிர்ப்பு மேலெழுந்து வருகிறது.

பெயர் வெளியிடாமலும் மற்றும் குற்றச்சாட்டுக்களைக் குறிப்பிட்டுக் கூறாமலும் அண்மையில் விசாரணையின்றி தற்காலிக பதவிநீக்கம் செய்யப்பட்ட பொது ஒலி/ஒளிபரப்பு சேவையின் (PBS) பிரபலம் டாவிஸ் ஸ்மைலி, அவரை தொடர்பு கொள்ளாமலேயே 'விசாரணை எனப்படும்' ஒன்றைத் தொடங்கியதற்காக PBS ஐ கண்டித்து கொந்தளிப்போடு அறிக்கை ஒன்றை வெளியிட்டார். கவலை தொனிக்கும் நண்பர்களின் அழைப்புகள் மூலமாக ஸ்மைலி கேட்கப்பட்ட விசாரணை கேள்விகள் குறித்து அறிந்த பின்னர், குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க தனக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென கோருவதற்காக வழக்கு தொடுக்க இருப்பதாக அச்சுறுத்தினார்.



'பல ஆண்டுகளுக்கு முன்னர் என்னுடன் வேலை செய்த ஒருவருடன் மனமுவந்து நான் உறவு வைத்திருந்தாலும் கூட, அது இவ்விதத்தில் பொதுவாக அவமானப்படுத்துவதற்கும் தனிப்பட்டரீதியில் சீரழிப்பதற்கும் எடுத்துச் செல்லக்கூடிய விடயமா, ஆண்டவனே நமக்கு உதவ வேண்டும்' என்று ஸ்மைலி எழுதினார். 'PBS விசாரணையாளர்கள் எனது எந்தவொரு தனிப்பட்ட ஆவணங்களையும் மீளாய்வு செய்ய மறுத்ததுடன், குற்றஞ்சுமத்தியவர்களின் யாரொருவரின் பெயரையும் வழங்க மறுத்தனர். எனது இப்போதைய பணியாளர்களுடன் பேசுவதற்கும் கூட மறுத்தனர். யாரென்றே தெரியாத இந்த ஆதார நபர்களிடம் இருந்து வரும் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக என்னை நானே பாதுகாத்துக் கொள்ள விசாரணை வழிமுறைகளுக்கு சமாந்தரமான எந்தவொரு வழிமுறையையும் எனக்கு வழங்குவதற்கு மறுத்தனர்' என்றார்.



'இது மிகவும் நீண்டு செல்கிறது' மேலும் 'நான், எனக்காக, திரும்பி போராட உத்தேசித்துள்ளேன்' என்று அவர் நிறைவு செய்தார்.

ஸ்மைலியின் ஜனநாயக உரிமைகளைப் புறக்கணித்து, மில்ஸ் என்டர்டைன்மென்ட் அண்மையில் அறிவிக்கையில், மார்டின் லூதர் கிங் ஜூனியரின் வாழ்வின் கடைசி ஆண்டு குறித்து 40 நகரங்களில் அவர் நடத்தவிருந்த அரங்க நாடகத்திற்கு அது வழங்குவ தாகஇருந்த ஆதரவை இரத்துச்செய்து கொள்வதாக அறிவித்தது. மார்டின் லூதர் கிங் ஜூனியரே கூட, FBI முடுக்கிவிட்ட 'இயல்புக்கு மாறான' மற்றும் 'வழமைக்கு மாறான' பாலியல் நடத்தை பிரசாரம் ஒன்றின் இலக்கில் வைக்கப்பட்டவர் ஆவார்.

ரூபேர்ட் முர்டொச்சின் Daily Telegraph ஆஸ்திரேலிய நடிகர் ஜெஃப்ரி ரஷ்ஷை 'பாலியல் வேட்டைக்காரர்' என்று அசிங்கப்படுத்தும் ஒரு பிரசாரத்தில் அவரை இலக்காக்கியதும். அவர் 'எனது நிலைமையைச் சுற்றி அவர்கள் உருவாக்கி உள்ள களங்கங்கள், மறைமுகமான அவதூறு மற்றும் மிகைப்படுத்தல்களைச் சரி செய்ய' அப்பத்திரிகைக்கு எதிராக அவர் வழக்குத் தொடுக்கப் போவதாக அறிவித்து வெறும் ஒரு சில நாள்களுக்குப் பின்னர் ஸ்மைலியின் அறிக்கை வந்தது. இந்நிலைமையைச் சகித்துக் கொள்ள முடியாது. நீதிமன்றங்கள் மூலமாக எனது நற்பெயரை இப்போது நான் நிரூபிக்க முயல வேண்டும்' என்பதையும் அவர் சேர்த்துக் கொண்டார்.


இத்தகைய எதிர்ப்பின் அறிகுறிகளுக்கு இடையிலும், அப்பிரசாரமோ முன்பினும் அதிகமாக விரிவடைந்து தனிநபர்கள் மற்றும் நடவடிக்கைகளை வரிசையாக சிக்க வைக்க பரவி வருகிறது. அண்மையில் இலக்கில் வைக்கப்பட்ட முதல் பெண்மணியான கன்சாஸ் ஜனநாயகக் கட்சியின் ஆண்ட்ரியா ரேம்சே,காங்கிரஸிற்கான அவர் பிரசாரத்தை நிறுத்திக் கொள்வதாக அறிவித்தார். ரேம்சேயின் பாலியல் அறிவுரைகளை நிராகரித்ததற்காக தன்னை ரேம்சே பணியிலிருந்து நீக்கியதாகக் குற்றஞ்சாட்டிய ஒரு முன்னாள் பணியாளர் தொடுத்த வழக்கை அவர் செயலாற்றி வந்த நிறுவனம் முடித்து வைத்து விட்டதாக உள்ளூர் ஊடகங்கள் குறிப்பிட்டன. அந்த குற்றச்சாட்டுகள் குறித்த செய்திகளுக்குப் பின்னர், ஜனநாயகக் கட்சி தலைமை அவருக்கான ஆதரவை நிறுத்திக் கொண்டது. ஆனால், ரேம்சே அக்குற்றச்சாட்டுக்களைப் பொய் என்று வலியுறுத்துகிறார்.



(கேள்வி தொடரும்...)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

**கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 48**

## இந்திய இராணுவம் யாழினுள் புகுந்தது

### உயிர் தப்பிய ரத்தினகுமார்!

அப்போது இரத்தினகுமாருக்குத் திடீரெனக் கடுமையான காய்ச்சல் ஒன்று வந்தது. கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு மேல் விடாமல் காய்ச்சல் காய்ந்தது. இந்திய இராணுவத்தினரால் யாழ். வைத்தியசாலை தாக்கப்பட்டு, பல பெரிய டாக்டர்கள் சுடப்பட்டு இறந்திருந்த காலமது. அதனால் யாழ். வைத்தியசாலை அப்போது இயங்கவில்லை. மருத்துவ வசதி இல்லாத அந்நிலையில், இரத்தினகுமாரின் காய்ச்சல் கூடிக் கொண்டே போனது. 104-105 வரை காய்ச்சல் ஏறும். உடனுக்குடன் ஈரம் துடைத்து காய்ச்சலைத் தணிப்பேன்.

ஒரு மணித்தியாலத்துள் மீண்டும் காய்ச்சல் ஏறும். ஒரு மருந்திற்கும் காய்ச்சல் நின்றபாடில்லை. ‘‘அவன் தப்புவானா?’’ என்று பயந்தே போனோம். என்னென்னவோ மருந்துகள் எல்லாம் எடுத்த பிறகு, இறுதியில் ஒரு டாக்டர் தந்த மருந்தினால், இறையருள் கூட காய்ச்சல் தணிந்தது. என் மேல் வைத்த நம்பிக்கையால், காய்ச்சலின் போதும், மாறிய பிறகும் எனது வேண்டுகோளை ஏற்று, அவனை எங்களோடு இருக்க அவன் தாயார் அனுமதித்தார். உயிர்ப்பயமான நிலையிலும் என்னை நம்பி மகனை, எங்களோடு இருக்க அனுமதித்த அத் தாயின் கருணையை என்சொல்ல.

★ ★ ★

### குமாரதாசனும் உயிர் தப்பினார்

இந்திய இராணுவம் யாழில் நின்றபொழுது, ஒருநாள் ஈழநாடு பத்திரிகை நிறுவனத்திற்கு, புலிகளால் குண்டு வைக்கப்பட்டது. நாங்கள் தங்கியிருந்த வீட்டுக்காரர் திரு. இராஜலிங்கம் அவர்கள், அப்போது அப் பத்திரிகையில் முகாமையாளராய் இருந்தார். இந்திய இராணுவத்தின் வருகையின் பின்னரான சமாதானச் சூழ்நிலையில், இராஜலிங்கமும் துணைவியாரும் மீண்டும் யாழ். வந்தனர். அவர்கள் வந்ததும் நாங்கள் கம்பன் கோட்டத்திற்குப் புறப்படத் தயாரானோம். ஆனால், அவர்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை. எங்களைத் தங்களோடு தங்கியிருக்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்தி, கேட்டுக்கொண்டனர். அவர்கள் அன்புக்குக் கட்டுப்பட்டு, நாம் தொடர்ந்தும் அவர்கள் வீட்டிலேயே தங்கினோம். ஈழநாட்டு அலுவலகத்தில் குண்டு வெடித்ததும், ஆத்திரத்துடன் இந்திய இராணுவம், இராஜலிங்கத்தை ஏற்றிச்செல்ல எங்கள் வீட்டுக்கு வந்தது. வந்த இராணுவத்தினர் மிக முரட்டுத்தனமாய் நடந்து கொண்டனர்.

அப்போது இராஜலிங்கம் வீட்டில் இருக்கவில்லை. ‘‘அவர் வெளியே சென்றுவிட்டார்’’ என்று நாம் சொன்னதை நம்பாமல், இந்திய இராணுவத்தினர் வீட்டிலிருந்த குமாரதாசனை, முரட்டத் தனமாய்த் தங்கள் ‘‘ஜீப்பில்’’ ஏற்றிக் கொண்டு போனார்கள். குமாரதாசனது உயிருக்கு என்னாகிற்றோ என்று நடு நடுங்கிப்போனோம். என்ன செய்வ தென்றே தெரியவில்லை. நல்லகாலமாக இராஜலிங்கம் சிறிது நேரத்தின் பின் வந்து விட்டார். நடந்ததை அறிந்து உடனேயே என்னையும் ஏற்றிச் சென்று, ஈழநாட்டு அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த, குமார தாசனை மீட்டுத்தந்தார். அன்று இராணுவத் தினருக்கு இருந்த ஆவேசத்தில், குமாரதாசன் உயிர் தப்பியது கம்பன் அருளே!

★ ★ ★

### சோதனை மேல் சோதனை!

புலிகள் தலைமறைவாகி இருந்த நேரம் அது. புலிகளின் தொடர்பு இருந்தவர்களையெல்லாம், இந்திய இராணுவமும், மாற்று இயக்கங்களும் அழித்துக் கொண்டிருந்தன. அந்நேரத்தில் ஒரு நாள் என்னைச் சந்திக்க வந்த இளைஞன் ஒருவன், புலிகளின் தலைவர் ஒருவர் என்னைச் சந்திக்க விரும்புவதாகவும், அடுத்த நாள் காலை நீர்வேலிக் கந்தசாமி கோயிலடிக்கு, நான் வரவேண்டும் என்றும் கட்டளையாய்ச் சொல்லிப் போனான். பெரிய குழப்பம் ஏற்பட்டது. சந்தித்தால் இராணுவத்தினரின் எதிரிகளாவோம். சந்திக்காவிட்டால் புலிகளின் எதிரிகளாவோம்.

என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பித் தெளிந்து, அடுத்த நாள் பிரசங்கத்திற்குப் போவது போல, வேட்டி, சால்வையுடன் காரில் யாருக்கும் தெரியாமல் நீர்வேலி சென்றேன். அப்போது என்னை பிரசங்கங்களுக்கு அழைத்துச் செல்லும், கார்க்காரரான ‘‘மகான்’’ துணிந்து என்னை அவ் விடத்திற்குக் கூட்டிச் சென்றார். அங்கு வந்த புலி உறுப்பினரான ராஜன் என்பவர், எம்மைத் தமக்கு மறைமுகமாக உதவும்படி கேட்டுக் கொண்டார். இலக்கியச் சேவையே எமது நோக்கம் என்பதை அவருக்கு விளங்கப்படுத்தி, எம்மால் இவ்விடயங்களில் ஈடுபட முடியாது என்பதை, நாசூக்காய்க் கூறிவிட்டுத் திரும்பி வந்தேன்.

★ ★ ★

### இராமனைத் தந்தேன்!

இந்திய இராணுவத்திற்கும் புலிகளுக்குமிடையிலான சண்டை தொடங்கி, இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்பு, நாம் முழுமையாய்க் கட்டி முடிக்காமல் வைத்திருந்த, எங்கள் கம்பன் கோட்டத்தின் கீழ்ப்பகுதியில், இந்திய இராணுவம் முகாம் அமைத்தது. வைமன் ரோட்டில் எதுவும் செய்ய முடியாத நிலையில் நாம் இருந்தோம். கிட்டத்தட்ட பத்து மாதங்கள் முடிந்த பின்பு, அதை மீட்டுத் தரவும் ஆணையாளர் சிவஞானமே துணை செய்தார்.இராணுவ அதிகாரிகளோடு பேசி, ஒருநாள் கம்பன் கோட்டக் கட்டடத்துக்கு, அவர் என்னை அழைத்துச் சென்றார். கோட்டத்தின் நிலை கண்டு அதிர்ந்தேன்.

கோட்டத்தின் நடுக்கூடத்தில் பீரங்கியின் நீளக்குழாய் ஒன்று, தனியே கழற்றி வைக்கப்பட்டிருந்தது. சுற்றிவர இராணுவ வீரர்கள் அரைகுறை ஆடையோடு, தூங்கிக் கொண்டிருந்தனர். என் வழிபாட்டு அறையைப் பார்க்க வேண்டும் என்று, உள்ளே சென்றேன். சிவஞானம் வெளியில் இராணுவ அதிகாரியுடன் பேசிக் கொண்டிருந்தார். நான் உள்ளே சென்றதும் இரண்டு இராணுவ வீரர்கள் என்னருகில் வந்தனர். வடநாட்டவர்களான அவர்களுக்குத் தமிழ் தெரிந்திருக்கவில்லை. என்னருகில் வந்த அவர்கள், எனக்குப் புரியாத பாஷையில் ஏதேதோ பேசத் தொடங்கினார். முதலில் நான் சற்றுப் பயந்து போனேன். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று எனக்கு விளங்கவில்லை. அங்கிருந்த இராமன் படத்தைக் காட்டிக் காட்டி அவர்கள் ஏதோ சொன்னார்கள். அந்தப் படத்தை தங்களுக்குத் தரும்படி, அவர்கள் என்னிடம் கேட்கிறார்கள் என்பது பின்னர் தான் தெரியவந்தது. விட்டாற் போதுமென சம்மதமாய்த் தலையசைத்து விட்டு ஓடிவந்து விட்டேன். பின்னர், ஆணையாளரின் தலையீட்டால் இராணுவம் அங்கிருந்து வெளியேறியது.

### இராணுவம் தந்த தொல்லை

இந்திய இராணுவம் வெளியேறு முன் அவர்களால் நாங்கள் பட்டபாடு பெரும்பாடு. அப்போதெல்லாம் மாலை ஆறு மணிக்கே ஊரடங்கிவிடும். இந்திய இராணுவம் எங்கள் கட்டடத்தை விட்டு வெளியேறுவதற்கு முன், ஒரு வாரமாகத் தினமும் இரவு 7 மணி போல, சில இராணுவ வீரர்கள் ஒன்று சேர்ந்து தோளில் துப்பாக்கியுடன் நடந்து, எங்கள் வைமன் ரோட் வீட்டுக்கு வருவார்கள். நாய்கள் எல்லாம் ஊளையிட்டுப் பெரிய குரலெடுத்துக் குரைக்கும். அந்தச் சத்தம் கேட்டு அண்டை அயலெல்லாம் பயத்தோடு எட்டிப்பார்க்கும். உள்ளே நுழையும் அவர்கள் பெரிய சத்தத்தில் ஹிந்தியில் ஏதோ கேட்பார்கள். என்ன கேட்கிறார்கள் என்று தெரியாமல் நாங்கள் திகைப்போம். சத்தம் போட்டு விட்டுப் போய்விடுவார்கள்.

இது இரண்டு மூன்று நாள்களாய்த் தொடர, இராணுவம் கம்பன் கழகத்திற்கு இரவில் வந்து போவதாய், ஊரார் சிலர் கதைகட்டத் தொடங்கினர். இராணுவத்தோடு தொடர்பு வைத்தவர்களைப் போராளிகள் கொன்றுவந்த காலமது. பயந்து போனாம். கடைசியிற் தான் அவர்கள் ஏன் வந்தார்கள் என்ற உண்மை தெரியவந்தது. முகாமிட்டிருந்த கட்டடங்களுக்கு வாடகை கொடுக்க வேண்டும் என்பது, அவர்களின் இராணுவச் சட்டமாம். எங்களுக்கு எந்தவிதமான வாடகையும் அவர்கள் தரவில்லை. ஆனால், அவ் வாடகையை நாம் பெற்றுக்கொண்டதாக, கையெழுத்து இடும்படி கேட்டே அவர்கள் வந்திருக்கிறார்கள். உண்மை தெரிந்ததும் ‘‘தப்பினாற்காணும் சாமி!’’ என்று, அவர்கள் நீட்டிய பத்திரங்களில், கேட்ட இடங்களிலெல்லாம் கையெழுத்து போட்டுக் கொடுத்தோம்.

★ ★ ★

### போராளி மலரவன்

மலரவன் எங்கள் கழகத்தின் ஆதரவாளரான திருநாவுக்கரசரின் மகன். திருநாவுக்கரசு ஒரு கால் ஊனமானவர். புன்னாலைக்கட்டுவளில் புகையிலைக் குடில் வைத்திருந்தார். அற உணர்வுள்ள செல்வர். அவருக்கு மூன்று ஆண் பிள்ளைகள். மூவரையும் சென்ஜோன்ஸ் கல்லூரியில் சேர்த்துப் படிப்பித்தார். கல்லூரியில் படிக்கும் போதே எனது ரசிகனாய் இருந்தவன் மலரவன். தமிழ்க்காதலும், தேசப்பற்றும் மிகுந்தவன். இயக்கத்தில் சேர்ந்து கலை பண்பாட்டுக் கழகத் தலைவனாயிருந்தான். இவன் தான் எங்கள் கம்பன் விழாவில், புதுவையின் கவிதையைக் கேட்டு மயங்கி, அவரோடு தொடர்புகொண்டு, மெல்ல மெல்ல அவரை இயக்கத்திற்கு இழுத்துச் சென்றான். இவனது உதவியாளராய்த் திரிந்த புதுவை, இடையில் இவன் காயப்பட்டு இந்தியா செல்ல, இவனது பதவிக்கு வந்து செல்வாக்காய் இருந்தார். மலரவன் என்மேல் பெரும் மதிப்புக் கொண்டவன்.ஒரு முறை இவனும் இவனது குழுவினரும், தம்மை எதிர்த்த கரையூரைச் சேர்ந்த இளைஞன் ஒருவனை, தாக்கிக் கொன்று விட்டதாய் அறிந்து, அப்போது அவன் வின்சர் தியேட்டரில் நடத்திய, கலை நிகழ்ச்சியிலிருந்து எழுந்து வந்துவிட்டேன்.

அன்றிரவே புதுவையுடன் வீடு தேடி வந்து மன்னிப்புக் கேட்டான். நான் திட்டத்திட்டத் தலை குனிந்து கண்ணீர்வடித்துக் கேட்டுக் கொண்டான். பின்னாளில் இந்திய இராணுவம் யாழைக் கைப்பற்றிய போது, இயக்கத்தில் இருப்பதா, விடுவதா என்று குழப்பமுற்றான். இவனும் தமையனுமாக வைமன் றோட்டில் என்னைச் சந்தித்தனர். நீண்ட நேரம் பல விடயங்களையும் என்னுடன் பேசினர். அவையெல்லாம் தணிக்கைக்குரிய விடயங்கள். பின்னர் என் ஆலோசனையும் பெற்று, இயக்கத்திலிருந்து விடுபட்டுச் சென்றான். இன்று வெளிநாட்டில் நிறைவாய் வாழ்கிறான்.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir













தேசிய மீலாத் விழா கடந்த சனிக்கிழமை யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சபாநாயகர் கரு.ஜெயசூரிய கலந்து கொண்டார். யாழ். முஸ்லிம்களின் வரலாற்று கண்காட்சியை முஸ்லிம் சமய கலாசார அமைச்சர் எம்.எச்.எம்.ஹலீம் பார்வையிட்டார். நிகழ்வுக்கு வருகை தந்தவர்களைப் படங்களில் காணலாம். (இ-19)



# பூமிக்கு அருகே சந்திரன் வந்தால் சுனாமி...!



ப.பிரகாஷ்

இயற்கை எப்போதும் நமக்குச் சாதகமாகச் செயற்படுவதில்லை. அவ்வப்போது, ஏதாவது ஒரு வகையில் நம் மீதான கோபத்தை அது காட்டிக்கொண்டேதான் இருக்கிறது. அப்படி இயற்கை நிகழ்த்தும் பல அழிவுகளில் மிகவும் முக்கியமானது நிலநடுக்கமும் சுனாமியும்தான் . சுனாமி என்றால் என்ன? அது எப்படி உருவாகிறது?

சுனாமி என்ற வார்த்தை ஜப்பான் மொழியில் இருந்துதான் வந்தது இதற்கு பெரிய அலைகள் என்று பொருள். கடலுக்கு அடியில் ஏற்படும் நிலநடுக்கத்தால் கடலிலுள்ள நீர் மிகப் பெரிய அளவில்உந்தப்பட்டுபெரியபெரியஅலைகளாக உருவெடுத்து கரைக்கு வெளியே சேதத்தை ஏற்படுத்தும். இதைத்தான் நாம் சுனாமி என்கிறோம்.

சுனாமி ஏற்படும்போது தோன்றக்கூடிய அலைகள்மிகவும்ஆக்ரோஷமாகமேலெழும்பும். இந்த அலைகளின் அளவும் வீரியமும் கடலுக்கடியில் ஏற்படுகின்ற நிலநடுக்கத்தின் அளவைப் பொறுத்து மாறுபடும். சுனாமி என்பது ஒரேயொரு பெரிய அலை அல்ல அது அடுக்கடுக்கான அலைகளின் தொகுப்பு.

பெரும்பாலும் இந்த அலைகளால் கடலில் இருக்கும் நீர் தரைப்பகுதியை நோக்கி இடம்பெயர்வதால் நிலப்பரப்பின் இயல்பான தன்மை முற்றிலுமாக மாறிவிடும். அது மட்டுமல்லாமல் முன்பு நிலமாக இருந்த பகுதி நீராகவும்; நீராக இருந்த பகுதி நிலமாகவும் கூட மாற நேரிடும்.

சுனாமியின்போது அநேகமாக கடலில் உள்ள நீர் தரைப்பகுதிக்குச் சென்றுவிடுவதால் கடலுக்கு அடியில் உள்ள பவளப்பாறைகள் கூட எளிமையாகத் தென்படும். மணிக்கு சுமார் 1000 கீ.மீ வேகத்தில் வெகுண்டெழுகிற அலைகள் தன் பாதையில் உள்ள அனைத்தையும் நாசப்படுத்திக் கொண்டே முன்னேறும்.ஒரு சில நிமிடங்களில் நாம் நினைத்துப்பார்க்க முடியாத பேரழிவை அது ஏற்படுத்தி விடும்.

கடலில் இருந்து வெளிவருகிற ராட்சத அலைகளில் மாட்டிக்கொள்ளும்போது கூட எப்படியாவது தப்பித்துக்கொள்ள முடியும். ஆனால், இந்த நீர் திரும்ப கடலுக்குள் செல்லும்போது வழியில் உள்ள அத்தனையும் கடலுக்குள் சென்றுவிடும்.

பூமிக்கு அருகே சந்திரன் வரும் ஒவ்வொருமுறையும் சுனாமி, எரிமலை வெடிப்பு போன்ற இயற்கைச் சீற்றங்கள் அதிகமாக ஏற்படுகின்றன எனவிஞ்ஞானிகள்கணித்துள்ளனர். இந்தச் சமயங்களில் சந்திரனின் அளவு வழக்கத்தை விடப் பெரியதாகக் காட்சியளிக்கும். 1947, 1974,1992, 1995 ஆகிய ஆண்டுகளில் பூமிக்கு அருகே சந்திரன் வந்தபோது இதுபோன்ற கோரச் சம்பவங்கள் அரங்கேறின.

உலகில் இதுவரை ஏராளமான நாடுகளில் சுனாமி தன் கோரத்தாண்டவத்தை நிகழ்த்தியுள்ளது. இவற்றுள் மிக அதிகமான சேதம் 2004 டிசெம்பரில் நிகழ்ந்தது. இந்தச் சுனாமியில் இந்தியா, இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இரண்டு லட்சத்துக்கும் அதிகமானோர் பலியாகினர்.

1700களில் அமெரிக்காவின் வடக்கு கலிபோர்னியா ஓரிகன் வொஷிங்டன் ஆகிய நகரங்களைத் தாக்கிய பூகம்பம் ரிச்டர் அளவுகோலில் 9 ஆகப் பதிவானது. இதனைத் தொடர்ந்து ஜப்பானில் சுனாமி ஏற்பட்டது. 1755 இல் போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் 8.7 ரிச்டர் அளவுள்ள பூகம்பம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியால் 60 ஆயிரம் பேர் பலியானார்கள்.

1868 இல் சிலியில் ரிச்டர் அளவில் 9 ஆக பதிவான நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமி தென் அமெரிக்காவைத் தாக்கியது. இதில் சுமார் 25 ஆயிரம் பேர் பலியானார்கள்.

1906 இல் ஈகுவெடார் மற்றும் கொலம்பிய கடற்கரையில் ரிச்டரில் 8.8 அளவில் பூகம்பம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியில் 500 பேர் பலியானார்கள்.

1946 இல் யுனிமாக் தீவுகளில் 8.1 என்ற அளவில் பதிவான நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சுனாமிப் பேரலைகள் அலாஸ்காவைத் தாக்கியது. இதில் நூற்றுக்கணக்கானோர் இறந்துபோனார்கள்.

1960 இல் தெற்கு சிலியில் ஏற்பட்ட சுனாமியின்போது ஆயிரக்கணக்கானோர் பலியானார்கள். ரிச்டர் அளவுகோலில் நிலநடுக்கம் 9.5 ஆகப் பதிவானது.

1976 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டில் ஏற்பட்ட சுனாமி ஐயாயிரம் உயிர்களைக் காவு வாங்கியது. அப்போது ஏற்பட்ட நிலநடுக்கம் 9.2 ஆகப் பதிவாகியிருந்தது.

2007 இல் சொலமன் தீவுகளில் 8.1 ரிச்டர் அளவில் பூகம்பம் பதிவானது அதனால் ஏற்பட்ட சுனாமியில் 28 பேர் பலியானார்கள். 2009 இல் தெற்கு பசுபிக் பகுதியில் 8.1 என்ற ரிச்டர் அளவில் பதிவான நில நடுகத்தால் ஏற்பட்ட சுனாமி நூற்றுக்கணக்கான உயிரைப் பறித்துச் சென்றது.

17. ஒலிம்பிக் கொடியில் உள்ள வட்டங்களின் எண்ணிக்கை
1) 5 2) 7 3) 3 4) 4

18. ஒரே மலரில் இரண்டு நிறங்களைக் கொண்டுள்ள பூ
1) சூரியகாந்தி 2) மல்லிகை 3) செவ்வரத்தை 4) கார்த்திகைப்பூ


19. 
படத்தில் உள்ளவர்
1) ஆறுமுகநாவலர் 2) அப்துல்கலாம் 3) அருணகிரிநாதர் 4) ஆபிரகாம் லிங்கன்


20. 
இவர் தற்போது உள்ள பதவி
1) பிரதமர் 2) முதலமைச்சர்
3) ஜனாதிபதி 4) பிரதம மந்திரி

21. பதிவுத்தபாலுக்கு உரிய கட்டணம்
1) ரூ. 20.00 2) ரூ. 25.00 3) ரூ. 30.00 4) ரூ. 35.00

22. இலங்கையில் காணப்படும் முத்திரைகளில் ஆகக் குறைந்த பெறுமதி உடையது
1) ரூ. 5.00 2) ரூ. 10.00 3) ரூ. 1.00 3) ரூ. 2.00

23. வற்றல் செய்வதன் மூலம் நீண்டகாலம் பேண முடியாதது
1) மீன் 2) மிளகாய் 3) இறைச்சி 4) மாம்பழம்


24. 
இந்த வடிவ பெட்டி கீறி விளையாடும் விளையாட்டு
1) சமுகுடு 2) சில்லுக்கோடு
3) குறுக்கும்பாச்சல் 4) தடைகளைத் தாண்டி வேகமாக ஓடுதல்


25. 
இப்படம் உணர்த்தும் விளையாட்டு
1) தடைகளைத் தாண்டி வேகமாக ஓடுதல் 2) இலக்குக்கு பந்து எறிதல்
3) தடை தாண்டல் 4) சமநிலையாக நடத்தல்


26. ஊதல் சித்திரத்திற்கு உகந்த வர்ணம்
1) பென்சில் கலர் 2) பெயின்ரிக்ஸ் கலர் 3) கலர் சோக் 4) கோழிச்சாயம்

27. அகலமான பாதையைக் காட்டும் குறியீட்டுப் படம்


(1)


(2)


(3)



(4)


28. முதலாவது அதிவேக பாதை
1) காலி - மாத்தறை 2) காலி - மாத்தளை
3) கண்டி - காலி 4) கண்டி - யாழ்ப்பாணம்

29. உலகில் அதிகமாக மக்கள் தொகை கூடிய நாடு
1) சீனா 2) இந்தியா 3) ஜப்பான் 4) சிம்பாபே


30. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட நிலப்பரப்பு
1) குடா 2) கண்டம் 3) தீவு 4) நாடு (30x1= 30 புள்ளி)




வினாத்தாள் - 3 பகுதி II இன் தொடர்ச்சி......

3. 


கூட்டி வரும் விடையை சொற்களில் எழுதுக.
.......................................................

4. 
நிறம் தீட்டப்பட்ட பகுதியின் பின்னம் என்ன? ..............................


5. $\frac{1}{2}$ , $\frac{1}{3}$ , $\frac{2}{4}$ , $\frac{3}{6}$ இவற்றில் மிகவும் குறைந்த பெறுமானம் என்ன? ..............................




6. A , B ஆகிய இரு குடுவைகளில் உள்ள நீரின் கனவளவு யாது? ..............................
7. B யிலும் பார்க்க A யில் எவ்வளவு கனவளவு அதிகமாக உள்ளது? ..............................
8. சாறுகேசன் 5cm நீளமான 8 ஈர்க்குக் குச்சிகளையும் 10 cm நீளமான 4 ஈர்க்குக் குச்சிகளும் 4 றெஜிபோம் குண்டுகளையும் கொண்டு ஒரு திண்ம உரு அமைத்தான் இவ் உருவின் பெயர் என்ன?
.......................................................

9. 
இக் கூட்டு உருவின் முகங்கள் எத்தனை? ..............................

10. அபிசா 20kg 800g நமிதா 19kg 350g இவர்கள் இருவரின் மொத்த நிறை எவ்வளவு? ..............................


11. 
இவ்வுருவின் ஒரு பக்கத்திற்கு 300ml பெயின்ற் தேவையெனின் சுற்றிவர முழுவதிற்கும் பூச தேவையான பெயின்ரின் அளவு யாது?
.......................................................

**விலைப்பட்டியலை அவதானித்து விடை எழுதுக.**

12.

| அளவு | பொருட்கள் | அலகு ஒன்றின் பெறுமதி | ரூ. ச |
|---|---|---|---|
| 1 | தீப்பெட்டி | 5.00 | ................ |
| 2kg | சீனி | 110.00 | ................ |
| 500g | உப்பு | ................ | 30.00 |
| 5 | பலூன் | ................ | 25.00 |

❖ **யா/ இளவாலை கன்னியர் மடம் தரம் 5 மாணவர்களின் விரும்பும் மலர்களின் விபரம் வருமாறு இத் தகவல் திரட்டும் நாளில் ஒரு மாணவி பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை மிகுதி மாணவர்களின் விபரமே கீழே தரப்பட்டுள்ளது.**




13. அதிக மாணவர்கள் எந்த பூவை விரும்புகின்றார்கள்? ..............................................

14. அல்லி மலரிலும் பார்க்க சூரியகாந்திப் பூவினை எத்தனை பேர் அதிகமாக விரும்புகிறார்கள்?

..............................................

15. இப்பாடலில் தரம் 5 இல் கற்கும் மாணவர்கள் எத்தனை பேர்? .............................................. (15x2=30 புள்ளி)

**14. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கீறிடுக.**

1. பறக்க முடியாத பூச்சி
   1) வண்ணத்துப்பூச்சி 2) பேன் 3) வெட்டுக்கிளி 4) தேனீ


2. சிற்றுண்ணி வகைக்குள் அடங்கும் பூச்சி
   1) சிலந்தி 2) தேனீ 3) குளவி 4) வண்டு

3. இலங்கை தொலைபேசியின் இலக்கங்களில் கட்டாயம் வரவேண்டிய இலக்கம்
   1) 0 2) 11 3) 77 4) 75

4. ஆண்டு முழுவதும் பூக்கும் தாவரம்
   1) கொன்றை 2) முள்முருங்கை 3) அலரி 4) பூவரசு

5. நீரில் வாழும் தாவரம்
   1) சீதேவியார் செங்கழுநீர் 2) ஐந்தூரியம் 3) ஐதறில்லா 4) பன்னம்

6. கொழுகொம்பின்றி வாழும் தாவரம்
   1) பூசணி 2) பயிற்றை 3) வெற்றிலை 4) பாவல்

7. 



இந்தப் பரிசோதனை எதற்காக செய்யப்படுகிறது?
   1) சூரிய ஒளி அவசியம் என்பதை அறிய
   2) ஆவியீர்ப்பு
   3) பதியம் செய்ய
   4) கூற முடியாது

8. அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படும் நோயாக இருக்கக்கூடியது.
   1) தடிமன் 2) கொலரா 3) மலேரியா 4) தலையிடி



9. பின்வரும் கூற்றுக்களில் தவறான கூற்று
   1) நீருக்கு நிச்சயமான வடிவம் இல்லை
   2) வெப்பம் ஏற்றும்போது நீர் நீராவியாக மாறுகிறது
   3) நீரினை திண்ம நிலைக்கு மாற்ற முடியும்
   4) நீர் மனிதனுக்கு மட்டுமே பயன்படும்


10. நீர் நிரம்பிய கண்ணாடிக் குவளையின் அடியில் ஒரு நாணயக்குற்றியை போட்டு அதனை நீர்மட்டத்திற்கு மேலே கண்ணை வைத்து பார்க்கும்போது எப்படித் தெரியும்?
   1) குறித்த நாணயம் அதே அளவில் குவளையில் தெரியும்
   2) குறித்த நாணயம் அதே அளவில் நீரின் மேல் பகுதியில் காணப்படும்
   3) குறித்த நாணயம் பெரிதாக ஆழத்தில் தெரியும்
   4) குறித்த நாணயம் பெரிதாக குறைந்த ஆழத்தில் தெரியும்



A B C D

11. மேலே காட்டப்பட்டவாறு எரியும் மெழுகுதிரியினை கண்ணாடி குவளையினால் மூடினால் நீண்ட நேரம் எரிவது
   1) B 2) A 3) D 4) C


12. “மின்னல் விபத்து” என்பதினை காட்டும் உரு



1 2 3 4


13. 

இவ் உரு காட்டுகிறது
   1) உடையத்தக்கது
   2) கவனமாக பிடித்துக் கொள்ளவும்
   3) இப்பக்கம் மேடு
   4) ஒன்றன்மீது ஒன்று வைக்கக்கூடாது

14. 

இப்படம்
   1) ஆலயங்கள்
   2) சிவனொளிபாத மலை
   3) சிகிரியா
   4) எம்பக்க தேவாலயம்

15. பின்வரும் செயற் பொறிமுறையில் எதில் கூடிய எண்ணிக்கை உடைய குண்டூசிகளைக் கவரும்?



(1) (2) (3) (4)

16. போர்த்துக்கீசர் இலங்கைக்கு வருகை தந்தது
   1) 1976 2) 1905 3) 1505 4) 1776

# குண்டு மனிதர்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்

## ஆய்வில் புதிய தகவல்

லண்டன்,டிசெ.27

மனதில் மிக அதிகமான பொறுமை குடிகொண்டிருக்கும் குண்டு மனிதர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர் என ஆய்வில் தெரிய வந்துள்ளது.

அதிக உடல் எடையுடன் கூடிய குண்டு மனிதர்களின் வாழ்க்கை நிலை தொடர்பாக சமீபத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தை சேர்ந்த நிபுணர்கள் ஜொயிஸ் மில்லர்ட் மற்றும் ஜோர்ஜ் டேவி ஸ்மித் ஆகியோர் இங்கிலாந்தில் 50 ஆயிரம் ஆண் மற்றும் பெண்களிடம் இத்தகைய ஆய்வை நடத்தினர்.

அதில் 37 முதல் 73 வயதினர் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களது உயரம், உடல் எடை மற்றும் உடல்நலம் தொடர்பாகத் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

அவர்களில் அளவுக்கு மீறிய உடல் எடையுடன் குண்டாக இருந்தவர்கள் அதிக இரத்த அழுத்தத்துடன் இருந்தனர். அதனால் அவர்கள் இளம் வயதிலேயே நீரிழிவு நோயால் அவதிப்படுகின்றமை கண்டறியப்பட்டது.

அதே நேரத்தில் அவர்கள் மனதில் மிக அதிகமான பொறுமை குடிகொண்டிருக்கும். அதனால் அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கின்றனர் என அதிசயிக்கத்தக்க தகவலைத் தெரிவித்துள்ளனர்.

# உலகம் முழுவதும் போர்க் காற்று வீசுகிறது

## போப் பிரான்சிஸ் தெரிவிப்பு



வாடிகன்,டிசெ.27

கிறிஸ்மஸ் தினத்தையொட்டி வாடிகன் நகரில் உள்ள செயின்பீட்டர் சதுக்கத்தில் உரையாற்றிய போப் ஆண்டவர், உலகம் முழுவதும் போர்க் காற்று வீசிக் கொண்டிருக்கிறது எனக் கூறினார்.

வாடிகன்நகரில் உள்ள செயின்பீட்டர் சதுக்கத்தில் போப் ஆண்டவர் பிரான்சிஸ் நேற்று முன்தினம் கிறிஸ்மஸ் சிறப்புப் பிரார்த்தனை நடத்தினார். அதில் லட்சக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அவர்கள் மத்தியில் போப் ஆண்டவர் பிரான்சிஸ் உரை நிகழ்த்தினார். அப்போது அவர் கூறியவை வருமாறு–

உலகம் முழுவதும் போர்க்காற்று வீசிக்கொண்டிருக்கிறது. மத்திய கிழக்கிலும், ஆபிரிக்காவிலும் பதற்றம் நிலவி வருகிறது. அதில் பாதிக்கப்படும் சிறு குழந்தைகளின் முகத்தில் தெரியும் வேதனை மிகவும் பாதிக்கிறது. எனவே, போர்ப் பதற்றத்தைத் தணிக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

பலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் இடையே அமைதியை ஏற்படுத்த வேண்டும். அது மீண்டும் பேச்சு நடத்தினால் மட்டுமே சாத்தியமாகும். கொரிய தீபகற்பத்தில் நிலவும் முரண்பாடுகளைக் களைய வேண்டும். அப்போது தான் பரஸ்பரம் நம்பிக்கை மேம்படும் எனக் கூறியுள்ளார். (பு)

# கிறிஸ்மஸ் பிரார்த்தனைக்குச் சென்ற 20 பேர் பஸ் விபத்தில் பரிதாபச் சாவு!

மணிலா,டிசெ.27

பிலிப்பைன்ஸ் நாட்டின் ஆகோ நகரில் கிறிஸ்மஸ் பிரார்த்தனைக்கு சென்றவர்கள் பஸ் விபத்துக்குள்ளானதில் 20 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள ஆகோ நகரைச் சேர்ந்தவர்கள் மனோவோக் நகரில் உள்ள தேவாலயத்தில் நடைபெறும் கிறிஸ்மஸ் சிறப்புப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதற்காகச் சிறிய பஸ்ஸில் புறப்பட்டுச் சென்றனர். செல்லும் வழியில் எதிரே வந்த மற்றொரு பஸ் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்தக் கோர விபத்தில் 20 பேர் பலியாகினர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பலர் காயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்



டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம், மணிலா நகரில் உள்ள வணிக வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 39 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (பு)

# விண்வெளியில் ஆடம்பர 5 நட்சத்திர ஹோட்டல்

சுற்றுலாப் பயணிகளைக் கவர சர்வதேச விண்வெளியில் 5 நட்சத்திர சொகுசு ஆடம்பர ஹோட்டலை கட்ட தனியார் மற்றும் ரஷ்ய அரசும் இணைந்து திட்டமிட்டுள்ளது.

பூமிக்கு மேல் விண்வெளியில் 400 மைல் சர்வதேச விண்வெளி ஆய்வகம் கட்டப்பட்டு வருகிறது. அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், கனடா மற்றும் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க், பெல்ஜியம் உள்ளிட்ட 17 ஐரோப்பிய நாடுகளின் விண்வெளிக் கழகமும் இணைந்து அதை உருவாக்கி வருகிறது.

அதற்காக இதுவரை 150 பில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் அங்கு 5 நட்சத்திர சொகுசு ஆடம்பர ஹோட்டலை கட்ட ரஷ்யா திட்டமிட்டுள்ளது.

அங்கு 4 ஆடம்பர அறைகள் கட்டப்படவுள்ளன. இங்கு மருத்துவ வசதி, உடற்பயிற்சிக் கூடம் இணைய வசதி போன்றவை ஏற்படுத்தப்படவுள்ளன. (பு)

# வெனிசூலா தூதரக அதிகாரிகளை கூண்டோடு வெளியேற்றி கனடா பதிலடி!

ஒட்டாவா,டிசெ.27

கனடா மற்றும் பிரேசில் தூதர்களை நாட்டை விட்டு வெனிசூலா வெளியேற்றிய நிலையில், அந்நாட்டுத் தூதரக அதிகாரிகளை மொத்தமாகக் கனடா வெளியேற்றிப் பதிலடி கொடுத்துள்ளது.

தென்னமரிக்க நாடான வெனிசூலாவில் சில மாதங்களுக்கு முன்னதாக எதிர்க்கட்சிகள் அங்கம் வகிக்கும் தேசிய சபையைக் கலைத்து விட்டுப் புதிதாக அரசியல் சாசன சபையை அதிபர் நிக்கோலஸ் மதுரோ அமைத்தார். முழுக்க முழுக்க ஆளும் கட்சியே இந்தச் சபையில் பங்கு வகிக்கின்றது எனக் கூறி எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தின. இதனால், ஏற்பட்ட கலவரத்தில் 120இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

அதிபர் மதுரோவின் நடவடிக்கைக்கு அமெரிக்கா, கனடா



உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்ததோடு சில தடைகளையும் விதித்தன.

கனடாவில் உள்ள வெனிசூலா தூதரக அதிகாரிகள் ஊழல் மற்றும் மனித உரிமைகளை மீறினர் எனக் கூறி அந்நாட்டு அரசு அவர்களுக்குச் சில தடைகளை விதித்தது.

கடந்த வாரம் திடீரென கனடா தூதர் க்ரைப் கோவாலிக் மற்றும் பிரேசில் தூதர் ரை பெரைரா ஆகிய இருவரையும் நாட்டை விட்டுவெளியேறுமாறு வெனிசூலா அரசியல் சாசன சபையின் தலைமை பொறுப்பில் இருக்கும் டெல்சி ரோட்சிக்ஸ் உத்தரவிட்டார்.

தூதரக அதிகாரிகளுக்கான சட்டதிட்டங்களை மேற்கண்ட இருவரும் ஒழுங்காகக் கடைப்பிடிக்கவில்லை எனவும், வெனிசூலாவின் உள் விவகாரங்களில் தலையிட்டார்கள் என்றும் அவர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

இந்த நிலையில், வெனிசூலாவின் நடவடிக்கைக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக அந்த நாட்டுத் தூதர் வில்மர் பார்ரியெண்டோஸ் பெர்னாண்டஸ் மற்றும் தூதரக அதிகாரி ஏஞ்சல் ஹெர்ரேரா ஆகியோரை நாட்டை விட்டு வெளியேற கனடா உத்தரவிட்டுள்ளது. (பு)

# பெரு நாட்டின் முன்னாள் அதிபர் விடுதலை

லிமா,டிசெ..27

பெரு நாட்டில் மனித உரிமை மீறல் மற்றும் ஊழலில் ஈடுபட்டார் என 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்ற முன்னாள் அதிபரை தற்போதைய அதிபர் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்துள்ளார்.

பெரு நாட்டின் அதிபராக கடந்த 1990 முதல் 2000ஆம் ஆண்டுவரை பதவி வகித்தவர் அல்பெர்டோ பூஜிமோரி. அந்நாட்டில் அப்போது தலைவிரித்தாடிய மாவோயிஸ்டுகளின் ஆதிக்கத்தை இவர் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கினார் என ஒரு தரப்பினர் இன்றும் கருதுகின்றனர்.

மேலும், அங்கு கோலோச்சி வந்த இடதுசாரி இயக்கத்தினரை ஈவிரக்கமின்றி கொல்லவும் இவர் உத்தரவிட்டார்.

இந்த நிலையில், ஆல்பெர்டோ பூஜிமோரி தனது பதவிக் காலத்தில் ஆட்சி, அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி லஞ்சம் வாங்கினார் எனத் தொடரப்பட்ட ஒரு வழக்கில் கடந்த 2007ஆம் ஆண்டு அவருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கொலைப்படையினரை ஏவி மனிதாபிமானமற்ற முறையிலும், மனித உரிமைகளை மீறிய வகையிலும் தனது அரசியல் எதிரிகளை கொன்று குவித்தார் எனத் தொடரப்பட்ட வழக்கில் கடந்த 2009ஆம் ஆண்டில் அவருக்கு 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சுமார் பத்தாண்டுகளாகச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் முன்னாள் அதிபர் அல்பெர்டோ பூஜிமோரிக்குத் தற்போது வயது 79. குறைவான ரத்த அழுத்தம், மற்றும் தடுமாற்றமான இதயத் துடிப்பால் மிகவும் மோசமான உடல்நிலையில் இருக்கும் அவரைச் சிறையில் இருந்து விடுதலை செய்து சிகிச்சை அளிக்க அரசு உதவிட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

இதையடுத்து, அல்பெர்டோ பூஜிமோரிக்குப் பொது மன்னிப்பு வழங்கி தற்போதைய அதிபர் பெட்ரோ பப்லோ குக்ஸின்ஸ்கி உத்தரவிட்டார்.

சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட அவர் அந்நாட்டின் தலைநகரான லிமா நகரில் உள்ள பிரபல வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனச் செய்திகள் வெளியாகி வருகின்றன. (பு)

## ஆர்.கே.நகர் தேர்தலில் வெற்றி:

# சசியிடம் தினகரன் ஆசிபெற ஆயத்தம்





சென்னை,டிசெ.27

ஆர்.கே.நகர் தொகுதி இடைத் தேர்தலில் வெற்றி பெற்றதை யடுத்து சசிகலாவைத் தினகரன் நாளை சிறையில் சந்தித்து வாழ்த் துப் பெறவுள்ளார்.

சென்னை ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலில் சுயேச் சையாகப் போட்டியிட்ட டி.டி.வி. தினகரன் பெருவாரியான வாக்கு கள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றார். தன்னை எதிர்த்து நின்ற 58 வேட்பாளர்களில் 57 பேரை அவர் கட்டுப்பணம் இழக் கச் செய்தார். இந்த வெற்றி மூலம் இடைத்தேர்தல் வரலாற்றில் தினகரன் புதிய சாதனையைப் படைத்துள்ளார். தினகரனின் இமாலய வெற்றி அவருடைய ஆதரவாளர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மகத்தான வெற்றியைத் தேடிக் கொடுத்த ஆர்.கே.நகர் மக்களுக்கு தினகரன் நேரடியாகச் சென்று நன்றி தெரிவிக்கவுள்ளார். தேர்தல் பிரசாரத்தின்போது சென்றது போல வீதி, வீதியாகச்சென்று அவர் நன்றி கூறவுள்ளார்.

இதற்கிடையே பெங்களூர் சிறைச்சாலையில் அடைக்கப்பட் டுள்ள சசிகலாவை நாளை தின கரன் சந்திக்க உள்ளார் எனக் கூறப்படுகிறது. அப்போது ஆர். கே.நகர் தேர்தலில் வெற்றி பெற்ற தற்காக தேர்தல் ஆணையம் வழங்கிய சான்றிதழையும் அவரி டம் காண்பித்து வாழ்த்துப் பெற உள்ளார்.

தேர்தல் வெற்றிக்குப் பின் நிகழவுள்ள இந்த முதல் சந்திப்பின் போது, தற்போதைய அரசியல் சூழல் தொடர்பாக விவாதிக்க உள் ளார் எனவும் கூறப்படுகிறது.(ப)

## அனைத்து அ.தி.மு.க எம்.எல்.ஏக்களும் தினகரன் பக்கம் சாய்ந்து விடுவார்கள்



புகழேந்தி

பெங்களூர்,டிசெ.27

அ.தி.மு.கவின் அனைத்து எம்.எல்.ஏக்களும் தினகரன் பக்கம் சாய்ந்து விடுவார்கள் என்று தினகரன் ஆதரவாளர் புகழேந்தி கூறியுள்ளார்.

தினகரன் சுயேச்சையாகப் போட்டியிட்டு இமாலய வெற்றி பெற்றுள்ளார். அவர் மீது பெண் கள் நம்பிக்கை வைத்து வாக்களித்துள்ளனர். ஜெயலலிதாவின் உண்மையான அரசியல் வாரிசு என்பதை அவர் நிரூபித்து விட்டார். அவருக்கு அ.தி.மு.க. எம்.பி செங்குட்டுவன் நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்தார். மற்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் அவருக்கு ரகசியமாக வாழ்த்துத் தெரிவித்து வருகிறார்கள்.

விரைவில் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் அனை வரும் தினகரன் பக்கம் வருவார்கள். சசிகலா ஒப்புதலோடு அவர் சட்டமன்றப் புதிய கட்சித் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டு முதலமைச் சர் ஆவார். இதற்கான காலம் கனிந்து வருகிறது என்று தெரிவித்துள்ளார். (ப)

## புதிதாக 21 அணு உலைகள் அணுசக்தி அமைச்சு அறிவிப்பு

நாடு முழுவதும் புதிதாக 21 அணு உலைகள் ஆரம்பிக்கப்படும் என்று அணு சக்தித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் செயற்படுத்தப்பட வுள்ள அணு உலைகள் பற்றி அணுசக்தி அமைச்சகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அந்த அறிவிப்பில், 'தற்போது நாடு முழு வதும் 22 அணு உலைகள் செயற்பட்டு வருகின்றன. அந்த அணு உலைகள் மூலம் 6ஆயிரத்து 780 மெகா வாட் மின் சாரம் தயாரிக்கப்படுகிறது.

மேலும், புதிதாக 21 அணு உலைகள் தொடங்கத் திட்டமிட்டுள்ளோம். அதற் கான பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டி யுள்ளன. அதிகரித்துவரும் மின்சாரத் தேவைக்கு அணு உலைகள் நிச்சயம் அவசியம். நாட்டில் இயங்கும் எந்த அணு உலைகளையும் மூடும் எண்ணம் கிடை யாது. உலகம் முழுவதும் 448 அணு உலைகள் செயற்பட்டு வருகின்றன என்று அறிவித்துள்ளது.

(ப)

## 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் ராகுலுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பாக அமையும்

மும்பை,டிசெ.27

குஜராத் தேர்தலில் தோற்றாலும் 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலில் காங்கிரஸ் தலை வர் ராகுல்காந்தி புதிய உத்வேகத்துடன் மீண்டு வருவார் என சிவசேனாக் கட்சி கருத்துத் தெரிவித் துள்ளது.

குஜராத்தில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் 150இற்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறுவோம் என பா.ஜ.க. கூறியிருந்தது. ஆனால், 100 இடங்களில் வெற்றி பெறுவது கூடக் கடினமான இலக்கு என்பது நிரூபணம் ஆகிவிட்டது. குஜராத்தில் 99 தொகுதிகளில் மட்டுமே பா.ஜ.க. வெற்றி பெற்றது. ராகுல்காந்தி - ஹர்திக் பட்டேல் அணி 77 இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது.

இந்த நிலையில், குஜராத் சட்ட பேரவைத் தேர் தல் பிரதமர் மோடிக்கும் ராகுல்காந்திக்கும் இடையே நடைபெற்ற போட்டி என சிவசேனா கட்சியின் அதிகாரப்பூர்வ பத்திரிகையான சம்னாவில் கூறப் பட்டுள்ளது.

தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியைத் தழுவி னாலும் பா.ஜ.க. தோல்விப் பயத்தில் அரண்டு போக வைத்த ராகுலின் பிரசாரம் பாராட்டிற்குரியது என



சிவசேனா சூளுரை

சிவசேனா பாராட்டியுள்ளது. காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவர் அக்கட்சியைத் தோல்வியில் இருந்து மீட்டு வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்வார் எனக் கூறியுள்ளது. 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் ராகுலுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பாக அமையும் என்று தெரி வித்துள்ளது. சிவசேனாவின் கருத்தை காங்கிரஸ் கட்சி வரவேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

## ரஜினி எம்.எல்.ஏ. ஆகலாம்; ஆனால் முதலமைச்சராக முடியுமா?



நடிகர் சேகர்

ரஜினி எம்.எல்.ஏ. ஆகலாம், ஆனால், முதல்வர் ஆக முடியுமா என்பது தெரியவில்லை என நடிகர் எஸ்.வி.சேகர் தெரிவித் துள்ளார்.

ரஜினியின் அரசியல் பிரவேசம் தொடர்பாகப் பேசிய அவர் ரஜினி அரசியலுக்கு வரலாம். ஆனால் அவரின் உடல்நிலை ஒத்துழைக்க வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன். 96 இல் தவற விட்ட ஒரு வாய்ப்பை 2018 இல் பிடிக்க முடியுமா என்பது தெரியாது. அவ்வாறு அவர் பிடித்து விட்டால் இறைவன் அருள் அவருக்கு இருப்பதாகவே கருதுகிறேன்.

ரஜினியை பா.ஜ.க. அரசியலில் பயன்படுத்திக்கொள்ளுமா என்பது தொடர்பாக அமித் ஷா தான் முடிவு செய்வார் எனவும் அவர் கூறியுள்ளார். (ப)

## என் அரசியல் நிலைப்பாடு பற்றி 31 ஆம் திகதியன்று அறிவிப்பேன்

சென்னை ராகவேந்திரா மண்டபத்தில் நேற்று முதல் ரசிகர்களை சந்திக்கும் ரஜினி காந்த், ரசிகர்கள் முன்னிலை யில் பேசும்போது எதிர்வரும் 31 ஆம்திகதி எனது அரசியல் நிலைப்பாடு பற்றி அறிவிப் பேன்என்று தெரிவித்துள்ளார்.

நடிகர் ரஜினிகாந்த் அரசி யல் கட்சி தொடங்குவார் என்ற எதிர்பார்ப்பு நீண்ட காலமாகவே இருந்து வருகி றது.

கடந்த முறை ரஜினிகாந்த் ரசிகர்களைச் சந்தித்த போது, நமது அரசியல் முறை சரி இல்லை. போர் வரும் போது களத்தில் இறங்குவேன்என்று அறிவித்தார்.

எனவே, ரஜினி விரைவில்



நடிகர் ரஜினிகாந்த்

அரசியல்கட்சி தொடங்குவார் என்று ரசிகர்கள் எதிர்பார்த்த னர். அவருடைய பிறந்த நாளான டிசெம்பர் 12ஆம் திகதி புதிய அரசியல் கட்சி பற்றி ரஜினி அறிவிப்பார் என்று கூறப்பட்டது.

இந்த நிலையில், நேற்று முதல் ரஜினி மீண்டும் ரசி கர்களை வருகின்ற 31ஆம் திகதி வரை சந்திக்கிறார். இதில் நேற்று புதிய கட்சி பற்றிய அறிவிப்பை ரஜினி வெளியிடுவார் என்று எதிர் பார்க்கப்பட்ட நிலையில், ரசிகர்கள்முன்பு பேசிய ரஜினி, தனது அரசியல் நிலைப்பாடு பற்றி எதிர்வரும் 31 ஆம்திகதி அறிவிப்பேன் என்று தெரி வித்துள்ளார். (ப)

காலைக்கதிர்
Kalaikkathir



## ஆஷஸ் 4ஆவது டெஸ்ட்:

# வோர்னரின் 21 ஆவது சதம் ஆஸி. 244/3 என முனைப்பு






ஆஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஷஸ் 4ஆவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியாவின் டேவிட் வோர்னர் அதிரடியாக விளையாடி சதம் அடித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து ஆஷஸ் டெஸ்ட் தொடரில் தற்போது விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 5 டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலியா முதல் 3 டெஸ்டில் வென்று ஏற்கனவே தொடரைக் கைப்பற்றி விட்டது. பிரிஸ்பேனில் நடந்த முதல் டெஸ்டில் 10 விக்கெட் வித்தியாசத்திலும், அடிலெய்ட்டில் நடந்த 2ஆவது டெஸ்டில் 120 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், பெர்த்தில் நடைபெற்ற 3ஆவது டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 41 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் வெற்றி பெற்று இருந்தது.

ஆஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஷஸ் 4ஆவது டெஸ்ட் போட்டி மெல்பேர்னில் நேற்று ஆரம்பமாகியது. பொக்சிங்டே என்று அழைக்கப்படும் இந்த டெஸ்டில் ஆஸ்திரேலிய கப்டன் ஸ்டீவன் சுமித் துடுப்பாட்டத்தை முதலில் தேர்வு செய்தார்.

ஆஸ்திரேலியாவின் தொடக்கம் சிறப்பாக இருந்தது. ஒருமுனையில் பன்கிராப்ட் பொறுமையாக விளையாட மறுமுனையில் இருந்த வோர்னர் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதனால் 27.3ஆவது ஓவரில் அந்த அணி 100 ஓட்டங்களைத் தொட்டது. அப்போது வோர்னர் 83 ஓட்டங்களுடனும், பன்கிராப்ட் 19 ஓட்டங்களிலும் இருந்தனர்.

பன்கிராப்ட் 26 ஓட்டங்களுடன் வோக்ஸ் பந்தில் வெளியேறினார். அப்போது ஓட்ட எண்ணிக்கை 122 ஆக இருந்தது. அடுத்து உஸ்மான் கவாஜா களம் வந்தார். வோர்னர் அதிரடியாக விளையாடி சதம் அடித்தார். அவர் 130 பந்தில் 100 ஓட்டங்களை எடுத்தார். இதில் 13 பவுண்ரிகளும், ஒரு சிக்ஸரும் அடங்கும்.

103 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அண்டர்சனின் பந்து அவரைப் பவிலியன் திருப்பியது.

தொடர்ந்து உஸ்மான் கவாஜா 65 பந்துகளை எதிர்கொண்டு 17 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஸ்ருவாட் பிராட்டின் பந்தில் சரிந்தார். களத்தில் இருந்த ஸ்மித்துடன் மார்க்கஸ் இணைந்தார். இருவரும் அதிரடி காட்ட ஓட்ட எண்ணிக்கை 244 ஆக எகிறியது. 89 ஓவர் முடிவில் ஆஸ்திரேலியா அணி 3 விக்கெட்டுகளை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஸ்மித் ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களுடனும், கான் மார்க்கஸ் 93 பந்துகளை எதிர்கொண்டு 31 ஓட்டங்களைப் பெற்றுக் களத்தில் உள்ளனர்.

## 2022 ஆம் ஆண்டு கொமன்வெல்த்:

# துப்பாக்கி சுடுதல் போட்டிக்கு பதிலாக 20:20 கிரிக்கெட்?

பர்மிங்ஹாமில் 2022 இல் நடைபெறவிருக்கும் கொமன்வெல்த் போட்டியில் துப்பாக்கி சுடுதல் போட்டிக்குப் பதிலாக இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியை சேர்க்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

பிரிட்டன் கொலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்த நாடுகளுக்கு இடையே நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை கொமன் வெல்த் போட்டி என்ற மிகப்பெரிய விளையாட்டுத் தொடர் நடத்தப்பட்டு வருகிறது.

ஒரு நாட்டில் விளையாட்டு நடத்தப்படும்போது அந்த நாடு 7 போட்டிகளை சேர்க்க பரிந்துரை செய்யலாம். அதன்படி தற்போது ஜூடோ, டேபிள் டென்னிஸ், மல்யுத்தம், ஜிம்னாஸ்டிக், டைவிங், சைக்கிளிங், கூடைப்பந்து ஆகிய போட்டிகளை சேர்க்கப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. துப்பாக்கி சுடுதல் போட்டி விருப்ப போட்டியாக வைக்கப்பட்டுள்ளது.

BIRMINGHAM 2022
XXII COMMONWEALTH GAMES CANDIDATE CITY
HEART OF THE UK, SOUL OF THE COMMONWEALTH

இதேநேரத்தில் ஆண்கள், -பெண்கள் இணைந்து விளையாடும் இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிக்கும் (Mixed Gender Twenty20 cricket) பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஒருவேளை இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டித் தொடர் ஏற்கப்பட்டால் கொமன்வெல்த் போட்டியிலிருந்து துப்பாக்கிச் சுடுதல் போட்டி நீக்கப்படலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப)

# 20 ஓவர் போட்டித் தரவரிசை: இந்திய அணி முன்னேற்றம்




இலங்கையை 3:0 என வென்றதன் மூலம் ரி-20 கிரிக்கெட் போட்டிக்கான ஐ.சி.சி. அணிகள் தரவரிசையில் இந்தியா 2ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இலங்கை அணிக்கு எதிரான 20 ஓவர் போட்டித் தொடர் தொடங்குவதற்கு முன்பாக 20 ஓவர் உலகத்தர வரிசையில் இந்தியா 119 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்தில் இருந்தது.

3 போட்டிக் கொண்ட 20 ஓவர் தொடரை முழுமையாக கைப் பற்றி அசத்தி உள்ளது. இதன் மூலம் தர வரிசைப் பட்டியலில் 4ஆவது இடத்தில் இருந்த இந்தியா 121 புள்ளிகள் பெற்று 2ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளது. 124 புள்ளிகளுடன் பாகிஸ்தான் முதல் இடத்தில் உள்ளது. (ப)

# அல்ப்ஸ் மலையில் கிரிக்கெட்: ஸ்மித், அப்ரிடி, சேவாக்

சுவிற்ஸர்லாந்தில் உள்ள புகழ்பெற்ற அல்ப்ஸ் மலையில் கிரிக்கெட் தொடர் நடைபெற இருக்கிறது. அந்தத் தொடரில் ஸ்மித், அப்ரிடி, சேவாக் இடம் பெறுகிறார்கள்.

ஐரோப்பிய கண்டத்தில் 8 நாடுகளில் பரந்து விரிந்து காணப்படுவது அல்ப்ஸ் மலைத் தொடராகும். இது ஆயிரத்து 200 கிலோமீற்றர் விரிந்து படர்ந்துள்ளது. இந்த மலை பனியால் சூழ்ந்திருக்கும். பனிச்சறுக்கு விளையாட்டிற்கு உகந்த இடமாகும். புகழ்வாய்ந்த இந்த மலையில் கிரிக்கெட் போட்டி நடைபெற இருக்கிறது. இதற்கு செயின்ட் மோரிஸ் தொடர் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

வருகிற பெப்ரவரி 8ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை இத்தொடர் நடைபெற இருக்கிறது. இதில் தென் ஆபிரிக்காவின் முன்னாள் கப்டன் கிரேம் ஸ்மித் பங்கேற்கிறார்.

அவருடன் பாகிஸ்தான் அதிரடி வீரர் ஷாஹித் அப்ரிடி, விரேந்திர சேவாக், மொகமது கயூப், சொகைப் அக்தர், ஜெயவர்தன, மலிங்க, மைக் ஹசி, கல்லிஸ், டேனியல் வெட்டோரி, நாதன் மக்கலம், எலியாட், மோன்டி பனேசர், ஒவைஸ் ஷா ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

என்ன எதிர்பார்ப்பு என்பது தொடர்பாக எனக்குத் தெரியாது. ஆனால், உலகின் தலைசிறந்த இடத்தில் ஒன்றான சுவிற்ஸர்லாந்து அல்ப்ஸ் மலையில் விளையாட உற்சாகமாக இருக்கிறேன். இந்தப் போட்டி பெரிய அளவில் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை உள்ளது என ஸ்மித் தெரிவித்துள்ளார். (ப)



## சம்பந்தனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உள்ளூராட்சித்தேர்தலில்அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சின்னத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து போட்டியிடும் தமிழ்த் தேசியப் பேரவையின் வேட்பாளர்கள் தொடர்பான அறிமுகக்கூட்டம்நேற்றுச்செவ் வாய்க்கிழமை நடைபெ ற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் தலைமைச் செயல கத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், சம்பந்தனை மஹிந்த தன் மகன் சகிதம் சென்று நலம் விசாரித்திருக் கிறார். ஆனால் உங்களைத் தானே மஹிந்தவை மீண்டும் ஆட்சிக்கொண்டுவரப் பாடுபடு வதாகக் கூட்டமைப்பினர் பிரசாரம் செய்கின்றனர் என ஊடகவியலாளர்ஒருவர்கஜேந் திரகுமாரிடம் கேள்வி எழுப் பினார்.

இதற்குப் பதிலளித்த கஜேந் திரகுமார், அது தான் தனக்கும் புரியவில்லை என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் –

இந்த அரசின் பங்காளியா கக் கூட்டமைப்பு இருக்கிறது. பங்காளிகளான மைத்தி ரியோ,ரணிலோ இரா.சம்பந் தனை வைத்தியசாலையில் எட்டிக்கூடப் பார்த்திருக்கவில் லை. ஆனால் மஹிந்த தனது மகனுடன் செல்கிறார்.அதே வேளை சம்பந்தனும் தன் பங்குக்கு மீண்டும் மஹிந் தவுடன் இணைந்து செயற்படத் தயார் என அழைப்பு விடுக்கின் றார்.

அவ்வாறாயின் மஹிந் தவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவர பாடுபடுவது யாரென்பது சொல்லாமல் இப்பொழுதுதமிழ்மக்களுக்குப் புரிந்திருக்கும் – என்றார். (ஐ –7)

## சோகமயமானது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இடங்களிலும் நேற்றுக் காலை நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

வடக்கில் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளி நொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில்நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. சுனாமியில் உயிரிழந்தோர் நினைவாக அமைக்கப்பட்ட கல்லறைகள், நினைவாலயங் களில்மக்கள்பெரும்எண்ணிக் கையாகக் கூடி அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன் உயிரிழந்தோ ருக்காக ஆலயங்களில் விடே பிரார்த்தனைகளும் இடம்பெற் றன.

கிழக்கிலும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

தாய்லாந்து, இந்தோனே சியா, மலேசியா, இந்தியா இலங்கை உள்ளிட்ட பல நாடு களில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழக்கக் காரணமான இந்த ஆழிப் பேரலை இடரால் வடக்கு – கிழக்கும் பெரும் உயிரிழப்பு, சொத்தழிவுஎன்பவற்றைச்சந்தி த்தது என்பது குறிப்பிடத்தக்கது.

( மேலும் செய்திகள், படங்கள் 6ஆம்,7ஆம் பக்கங்களில்)

## ஈ.பி.டி.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வெளிவருகின்றது.

நடைபெறவுள்ள உள்ளூ ராட்சித் தேர்தலுக்கான விஞ் ஞாபனம் உத்தியோகபூர்வ மாகயாழ்ப்பாணத்தில்அமைந் துள்ளகட்சித்தலைமையகத்தில் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வெளி யிட்டு வைக்கவுள்ளார்.

## சர்வதேசத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நிலைப்பாட்டைஉணர்த்தியுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்குமாகாணமகளிர்விவகார அமைச்சர் அனந்தி சசிதரன்.

மனித உரிமைகளுக் காகக் குரல்கொடுப்பதற்குச்சர்வதேச அளவில் மிக மோசமான சூழல் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டி யுள்ளஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் , முதலாவது பதவிக் காலத்துடனேயே பணியில் இருந்து விலகப்போவதாக அறிவித்துள்ளமை பெரும் அதிர்ச்சியையும் ஏமாற்றத் தையும்யும்தந்துள்ளதுஎனவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வரு மாறு:–

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டே வெளியுறவுக் கொள்கை மூலம் நான் பெற்ற ஆணையின் இறுதிக் கால மாகும். இரண்டாவது முறை யாகவும் மீண்டும் ஆணை யாளர் பதவியைப் பொறுப் பேற்கப் போவதில்லை என் பதை, மனித உரிமைகள் ஆணையாளர்அவரது பணியா ளர்களுக்கு கடந்த 20 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட மின்னஞ்சல் மூலம் தெரியப் படுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை மற் றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை ஆகிய உலக மாமன்றங்களின் மீதான நம்பிக்கையை தகர்த்தெறிந் துள்ளது ஆணையாளரின் இந்த நிலைப்பாடு. வல்லாதிக்க நாடுகளின் தலையீட்டினால் சுதந்திரமாகச் செயற்பட முடி யாமல் இருப்பதன் வெளிப் பாடாகவே ஆணையாளரின் இவ்வறிவிப்பு அமைந்துள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையையோ, சர்வதேசத் தையோ இனிமேலும் நாம் நம்பிக்கொண்டிருப்பதில் பயனில்லை. சர்வதேசத்தின் பிராந்திய நலன்களுக்கு ஒத்தி சைவான போக்கில் செயற்பட்டு அரசியல், இராஜதந்திரம் மற் றும் பொருளாதார நெருக்கடி களில் இருந்து இலங்கை அரசு தன்னை பாதுகாப்பதிலேயே அதிக கவனம் செலுத்திவரு கின்றது.

இவ்வேளையில் ஐக்கிய நாடுகள் ஆணையாளரின் கைவிரிப்பானது நடைபெற்ற இனவழிப்புக் குற்றங்க ளுக்கான பொறுப்புக்கூறல் கடப்பாட்டில் இருந்து இலங்கை அரசு வெகுவாக விலகிச்செல் வதை மேலும் ஊக்குவிப்ப தாகவேஅமைந்துவிடும்அபாய மேற்பட்டுள்ளது.

இலங்கை மட்டுமல்ல இன வழிப்பு போரிற்குச் சகல வழி களிலும் ஆதரவை வழங்கிய சர்வதேச சமூகமும் தனது பொறுப்புக்கூறல் கடப்பாட்டில் இருந்து விலகிச் செல்வதன் அறிவிப்பாகவே ஆணை யாளரின் நிலைப்பாட்டைப் பார்க்க வேண்டியுள்ளது.

சர்வதேசத்தின் கதவுகளும் இனிமேல் எமக்காகத் திறக் கப்போவதில்லை என்றகையறு நிலையில் ஒரே ஒரு தீர்வுதான் எம்முன் உள்ளது. தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை முன்னிறுத்திஉறுதியாகசெயற் படத்தக்க அரசியல் தலைமை யைதமிழர்கள்ஒன்றுபட்டுஏற்ப டுத்துவதன் மூலமே இதனை வெற்றிகொள்ள முடியும். என் றுள்ளது. (ஐ)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பொலிஸ் பிணை வழங்கப்பட மாட்டாது என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய தெரி வித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:

தொகுதிவாரி மற்றும் விகி தாசார முறைகொண்ட கலப்புத் தேர்தல் முறையூடான உள்ளூ ராட்சித் தேர்தல் எதிர்வரும் பெப் ரவரி மாதம் 10ஆம் திகதி நாடுமுழுவதும் நடைபெறவுள் ளது.

276 பிரதேச சபைகள், 24 மாநகர சபைகள், 41 நகரசபை களுமாக 341 உள்ளூராட்சி மன்றங்களுக்காக நடைபெற வுள்ள தேர்தலினூடாக 8 ஆயிரத்து 356 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

தேர்தலுக்காக நாடு முழு வதும் 13 ஆயிரம் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப் படவுள்ளன. பெரும்பாலான வாக்களிப்பு நிலையங்களி லேயே வாக்கெண்ணும் பணிகளை முன்னெடுப்பதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள் ளது. – என்றார். (ஐ)

## சி.ஐ.டியினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதிரடிப்படையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் இருவரின் விளக்கமறியல் எதிர்வரும் ஜனவரி 9ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி அரியாலை கிழக்கு, மணியம்தோட்டம், வசந்தபுரம் முதலாம் குறுக்கு வீதிப் பகுதி யில் 24 வயதுடைய டொன் பொஸ்கோ டினேசன் என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இளைஞர் மீது மேற்கொள் ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான விசார ணைகள் யாழ்ப்பாணத் தலை மையக பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்டுப் பின்னர் பொலிஸ்மா அதிபரின் பணிப் பின் பேரில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தக் கொலைச் சம்பவத் துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் சிறப்பு அதிரடிப்படையின் புலனாய்வு அதிகாரி உட்பட இருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் கட்ட ளையின் பிரகாரம் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந் தனர்.

சந்தேகநபர்கள்யாழ்ப்பாண நீதிமன்றநீதிவான்சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவி னரின் விசாரணைகள் தொடர் வதாக மன்றுக்கு அறிவிக்கப் பட்டது. அதனால் சந்தேகநபர் கள் இருவரையும் ஜனவரி 9ஆம் திகதிவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதி வான் கட்டளையிட்டார். (ஐ)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பதியுதீன் தனது பதவியை இராஜினாமாச்செய்யாவிட்டால் காதை பிடித்து இழுத்து வெளியே வீசவேண்டும் என வும் அவர் குறிப்பிட்டார்.

ராஜகிரியவில் நேற்று நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

வில்பத்துகாடழிப்புதொடர்பில் நாம் 2014ஆம் ஆண்டு ஆரம் பம்முதலேகூறிவருகின்றோம்.

நாம் இது குறித்து ஊடகச் சந்திப்புக்களை நடத்தியுள் ளோம். 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தோம்.

துரதிர்ஷ்டவசமாக அனை வரும்எம்மை இனவாதிகள்என அடையாளப்படுத்தியிருந்தனர். முஸ்லிம் எதிர்ப்புக் கொள்கை களைப் பின்பற்றுவதாகக் குற்றம் சுமத்தியிருந்தனர்.

ஜனாதிபதியினால் நியமிக் கப்பட்ட கணக்காய்வாளர் உள் ளிட்ட குழுவினர் இந்தக் காடழிப்பு பற்றிய விவரங்களை வெளியிட்டுள்ளனர்.

வில்பத்தில் காடழிப்பு இடம் பெற்றுள்ளதாகக்குற்றம்சுமத்தி யுள்ளனர். விசாரணை நடத்திக் குற்றவாளிகள்உரியமுறையில் தண்டிக்கப்படவேண்டும். விசா ரணை நடத்திக் குற்றவாளி களை தண்டிப்பதற்கு ரிஷாத் பதியுதீன்பதவியைராஜினாமா செய்யவேண்டும்.

பிணை முறி மோசடி தொடர பில் குற்றம் சுமத்தப்பட்ட போது ரவி கருணாநாயக்க பதவியை இராஜினாமா செய்தார், ஒரு பிரச்சினை காரணமாக விஜ யதாச ராஜபக்ஷ அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். எனினும், இந்தமாதிரியான ஒரு தீர்மானம் ஏன் ரிஷாத் தொடர் பில் எடுக்கப்படுவதில்லை.

நிறைவேற்று அதிகாரம் தேவையான சந்தர்ப்பத்தில் பயன்படுத்தவே இருக்கின்றது. படமெடுக்காவிட்டால் பாம்பை கூட விறகுக் கட்டுடன் சேர்த்துக் கட்டி விடுவார்கள் என புத்த பெருமானும் கூறியுள்ளார் – என்றார். (ஐ)

## சிதம்பரத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொடர்பான முக்கிய சந்திப் பொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

சிதம்பரத்திலுள்ள அருள் மிகு நடராசப் பெருமானுக்கு எதிர்வரும்ஜனவரிமாதம்இரண் டாம் திகதி திருவாதிரை நாள் நன்னீராட்டு விழா இடம்பெற வுள்ளது. இதனை முன்னிட்டு இலங்கைப் பத்தர்கள் அங்கு செல்வதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இதுதொடர்பானஏற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடுவதற் கும், கப்பல் பயண ஏற்பாடுக ளைத் துரிதப்படுத்துமாறு கோரவும் வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் இளங் கோவனையும், இந்தியத் துணைத்தூதர்நடராஜனையும் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, இந்து சமயப் பேரவை, கொடிகாமம் சிவத்தொண்டர் பேரவை, மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில் திருப்பணிச் சபைஆகியவற்றின்செயலாளர் கள் சென்று சந்தித்தனர். மற வன்புலவு கே.சச்சிதானந்தன் தலை மையில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

திருவாதிரை உற்சவத்துக்கு இன்னும் ஒருவார காலமே உள்ளநிலையில்அடியார்களுக் கான பயண ஆயத்தங்கள், கடவுச்சீட்டு, இந்திய விசா, செல வுக்கான பணம், கப்பல் கட்ட ணம்என்பனதொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

மேலும், இலங்கைக் கடவுச் சீட்டு வைத்திருப்போர் உடனடி யாக இணைய வழியாக எந்தச் செலவுமில்லாமல் இந்திய விசாவுக்குவிண்ணப்பிக்கலாம் என மறவன்புலவு சச்சிதானந் தன் குறிப்பிட்டார்.

தொடர்ந்துவரும்விடுமுறை நாள்களால் வரும் தடைகளை நிவர்த்திப்பதற்கு, முன்கூட்டியே விண்ணப்பிக்குமாறுதெரிவித்த சச்சிதானந்தன், கப்பல்ஏற்பாடு உறுதியானால் விசாவை இந் திய அரசு ஆகக் குறைந்த கட்ட ணத்தில்வழங்கும்வாய்ப்புள்ள தென்றும் குறிப்பிட்டார். (ஐ)

## ஜன.10க்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சில சிரேஷ்ட உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சிக்கு நேரடியான ஆதரவை வழங்குவார்கள் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், பொதுஜன பெர முனவின் தேர்தல் மேடையில் சு.கவின்உறுப்பினர்கள்வரும் மேடையேறப் போவதில்லை. தேர்தலில்பின்னர்அனைவரும் எமக்மேஆதரவைக்கொடுப்பார் கள் என்றும் அவர் கூறினார்.

கொழும்பு டார்லி வீதியில் அமைந்துள்ள சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் கலந்து கொண்டுஉரையாற்றியபோதே அவர்மேற்கண்டவாறுதெரிவித் தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

உள்ளூராட்சித் தேர்தல் குறித்த கொள்கைப் பிரகடனம் எதிர்வரும் 28ஆம் திகதி சு.கவின் தலைவரும் ஜனாதி பதியுமான மைத்திரிபால சிறி சேன தலைமையில் கொழும்பு சுகததாஸவிளையாட்டுஉள்ளக அரங்கில் வெளியிடப்படும். மறுநாள் தேர்தலில் போட்டியி டும் வேட்பாளர்களின் சத்தியப் பிரமாணம் இடம்பெறும்.

ஊழல் – மோசடியற்ற தூய் மையான உள்ளூராட்சி சியை உருவாக்குவதே சு.கவின் இலக்காகும்.

ஜீ.எல்.பீரிஸ் மற்றும் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவளித்துவந்தபலர் இன்று விலகியுள்ளனர். சு.கவுக்கும் பொது எதிரணிக்கும் இடையில் முன்னெடுக்கப்பட்ட இணக்கப் பேச்சுகளுக்குச்சிலர்மாத்திரமே எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். பெரும்பாலானவர்கள் ஆதர வே தெரிவித்திருந்தனர். நாளை 28ஆம் திகதிக்கும் ஜனவரி 10ஆம் திகதிக்கும் இடையில் அதிரடியான சில அரசியல்மாற்றங்கள்ஏற்படும். எதிர்பாராதவர்கள் எம்முடன் இணைந்துகொள் வார்கள். பொது எதிரணியில் இருக்கும் சிரேஷ்ட உறுப்பி னர்கள் நேரடியான ஆதரவைத் தேர்தலில் எமக்கு வழங்கு வார்கள். தேர்தல் முடிந்த பின்னர் பலர் எம்முடன் இணைந்து கொள்ளுவார்கள்.

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தின் கீழே அவர்கள் செயற்பட வேண்டும். சுத்தமான உள்ளூ ராட்சிநிறுவனங்களைஉருவாக் கும் ஜனாதிபதியின் பயணத் துக்கு உள்ளூராட்சி அதி காரத்தைப் பெற்றுக்கொடுத்து எமது வேட்பாளர்கள் வலுச் சேர்ப்பார்கள். – என்றார். (ஐ)

# இராணுவத்தினரின் நடமாட்டம் முல்லைத்தீவில் அதிகரிப்பு!

முல்லைத்தீவு, டிசெ. 27

முல்லைத்தீவில் இராணு வத்தினரின் நடமாட்டம் அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாவட்டத்தில் பொது மக்க ளின் பூர்வீக நிலங்கள் யுத்தம் முடி வடைந்த நிலையிலும் இராணுவத் தினரின் வசமிருந்து வந்தது.

இந்த நிலையில், அவற்றில் ஒரு பகுதி காணிகளைப் பொது மக்களிடம் படையினர் இன்று உத்தியோகபூர்வ மாகக் கையளிக்கவுள்ளனர்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் நகர் பகுதி எங்கும் நேற்று இராணுவத்தி னரின் பிரசன்னம் அதிகரித்துக் காணப் பட்டது என பொதுமக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

(க)



# இலங்கையில் ஆண்டுதோறும் 400 பேர் பாம்புக்கடியால் பலி!

கொழும்பு, டிசெ. 27

இலங்கையில் ஆண்டு தோறும் 80 ஆயிரம் பேர் பாம்புக் கடிக்கு உள்ளாகின்றனர் என்றும் இவர் களில் 400 பேர் உயிரிழக்கின்றனர் என்றும் களனிப் பல்கலைக்கழக ஆய்வொன்றில் குறிப்பிடப்படு கின்றது.

களனிப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜானக டி சில்வா, சிரேஷ்ட பேராசிரியர் மருத்துவபீடடாக்டர் அனுராதானி, கஸ்தூரி ரட்ண சிரேஷ்ட விரிவு ரையாளர், தலைவர் பொது சுகாதா ரத்துறையினர் ஆகியோரைக் கொண்ட குழு இந்த ஆய்வை மேற்கொண்டு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

நாடு முழுவதும் உள்ள மருத்து



வமனை அறிக்கைகள், பாம்புக்கடி பற்றிய தேசிய வீட்டு வசதி ஆய்வு ஆகியவற்றில் இருந்தே இந்த ஆய்வாளர்கள் தகவல் திரட்டியுள்ளனர்.

இதுவரை பாம்புக்கடி பற்றிய ஆய்வு, அதன் முக்கியத்துவம் என் பன எடுத்துரைக்கப்படவில்லை.

பாம்புக்கடிக்கு உள்ளானவர் களின் சிகிச்சைக்காக இலங்கை அரசாங்கம் 150 கோடியே ரூபாவை ஆண்டுதோறும் செலவிடுகிறது.

பாம்புக்கடி சிகிச்சைக்கென உள்ள மருந்தை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கு 6 கோடி டொலர் செலவிடப் படுகிறது.

மேலும், இந்த ஆய்வுக் குழுவில் பேராசிரியர் ராஜித விக்ரமசிங்க, பேராசிரியர் அனுலம் பத்மேஸ வரன், பேராசிரியர் குணவர்தன மற்றும் டாக்டர் ஷாலுகா ஜெய மான்னே ஆகியோரும் உள்ளடங்கு கின்றனர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# தேசிய நல்லிணக்க வாரம்!

கொழும்பு, டிசெ. 27

சமாதானத்தை மேம்படுத்துவதற்காக ஜனவரி மாதம் 8 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரையிலும் ஒவ்வொரு வருடமும் தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் நல்லிணக்க வாரத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்று அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அமைச்சரவை அமைச்சர் என்றவகையில் ஜனாதிபதியால் 2016 டிசெம்பர் மாதம் 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு கிடைத்த அனுமதியின்படி நாடு முழுவதும் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான குறிக்கோள் சமாதானத் துடன்கூடிய வலுவான உரையாடல்கள் மாத்திரமின்றி, வளமிக்க தேசமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான பங் களிப்புக்களை ஊக்குவித்தல், மக்களிடையே சாந்தி , சமாதானம், அன்பு, கருணை மற்றும் சகோதரத்துவம், ஆகியவற்றை விருத்தி செய்தல், பல்லின மக்களிடையே புரிந்துணர் வையும் நம்பிக்கையும் உறுதிபடுத்தல் என்பனவாகும்.

# கொள்கைகள் மட்டுமே மக்களுக்கு...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி ...)

என்பது தான். நாம் கூறி வருவது எமக் குத் தெரிந்த உண்மை. உண்மையைக் கூறாப்பின் நின்றால் பொய்மைக்கு நாம் இட மளிக்க வேண்டி வரும்.

சரித்திர ரீதியாக சிங்கள மொழி 6ஆம், 7 ஆம் நூற்றாண் டுகளிலேயே பிறந்தது என்றேன். எனவே அதற்கு முன்னைய மக்களைச் சிங்கள மக்கள் என்று நாம் எவ்வாறு அழைக்க முடியும் என்று கேள்வி கேட்டேன். சிங்கள மொழி பேசுவதால்த் தான் ஒரு குழு மக்கள் சிங்கள மக்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டார்கள். அந்த மொழியே ஒரு காலத்தில் இல்லா திருந்த போது அம் மக்கள் அந்தக் குழு வைச் சேர்ந்தவர்கள் என்று எவ்வாறு அடையாளப்படுத்த முடியும்? இது தான் யதார்த்தம். இது தான் உண்மை. நாங்கள் இது வரையில் இதைக் கூறவில்லை. இப்பொழுது இதை நான் கூற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதைப் பொறுக்க மாட்டாதவர்கள் தான் என்னைப் பைத்தி யம் என்கின்றார்கள், பயங்கரவாதி என் கின்றார்கள். பகைவனாகப் பார்க்கின்றார்கள்.

அடுத்து நான் சமஷ்டியைக் கோருவ தால் வன்முறை வெடித்துவிடும் என்று பயமுறுத் துகின்றார்கள். இப்பொழுது சிங்கள மக்களி டையே படிப்பறிவுடையவர் கள் சமஷ்டியைச் சரியென ஏற்றுக் கொண்டு வருகின்றார்கள். பின் எதற்கு இந்தப் பயம்? ஒரு விடயம் புரியாமல் இருக்கும் போது உணர்ச்சிவசப்பட்டு நாங் கள் அதை இதைக் கூறிவிடுகின்றோம். ஆனால் புரிந்துணர்வு ஏற்படும்போது ஆற அமர சிந்திக்கத் தொடங்குகின்றோம்.

சமஷ்டி ஒரு பூச்சாண்டி அல்ல. அது பிரிவினை அல்ல. மாறாக மக்களைச் சேர்க்கும் ஒரு அரசியல் உபாயம் என்பதை நாங்கள் சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். எங்களுள் சிங்களம் தெரிந்தவர்கள் இதைச் சிங்களப் பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். சிவாஜிலிங்கமும் நானும் இதைச் செய்கின்றோம். அதேபோல் சம்பந்தனும் சுமந்திரனும் சிங்களம் தெரிந்தவர்கள் என்ற முறையில் சிங்கள மக்களுக்கு சமஷ்டியின் தேவைகளையும் அரசியல் ரீதியான பொருத்தத்தையும் எடுத்துக்கூற முன்வரவேண்டும். எம் மவருள் சிலர் அது எப்படி சமஷ்டியைக் கேட்பது சிங்களவர்கள் அதற்கெதிரே என்று கூறுகின்றார்கள். அவர்கள் தான் தெற்கில் இருந்து கொண்டு சிங்கள மக் கள் தலைவர்களை உசுப்பேற்றி விடு கின்றார்கள்.

இவர்கள் ஒன்றைப் புரிந்த கொள்ள வேண் டும். நாங்கள் வடகிழக்குப் இணைப்பைவிட்டுக்கொடுத்து, தாயகத்தை விட்டுக் கொடுத்து, சுய நிர்ணய உரி மையை விட்டுக் கொடுத்து, சமஷ்டியை விட்டுக்கொடுத்து ஒரு சில எலும்புத்துண்டு களுக் காகக் குறைந்த ஒரு தீர்வைப் பெற்றுவிடலாம். எலும்புத் துண்டுகள் எமது அப்போதைய சுயநலப் பசியைத் திருப்திப்படுத்தக் கூடும். ஆனால் நாள டைவில் நடக்கப் போவதென்ன? எமது தனித்துவம் அழிந்து விடும். மீண்டும் மீண்டும் எமது மக்கள் வெளி நாடுகள் நோக்கிச் செல்வார்கள். இப்பொழுது எமது வடமாகாண சபையில் இருவர் இருக்கும் இடத்தில் சபையின் பாதி அவர்களின் மக்கள் என்ற நிலை ஒரு இருபது வருடங் களுக்குள்ளேயே ஏற்பட்டு விடும்.

இன்று பறங்கியர் பற்றி பேசும் போது நாம் கடந்த காலத்தைச் சுட்டியே பேசுகின் றோம். ஐம்பது வருடங்களின் பின்னர் எம்மைப் பற்றியும் கடந்த காலத்தில்த்தான் வைத்துப் பேசுவார்கள். இருந்தார்கள் இப்பொழுதில்லை. ஒரு சிலரே ஆங்காங்கே உள்ளனர் என்பார் கள். இந்த நிலை வர ஒரு சில எலும்புகளைப் பெற்று கொள்கை களை விட்டுக் கொடுப்பது தான் சரி என்று இந்தத் தெற்கத்தியத் தமிழர்கள் நினைக் கின்றார்களா? இந்த நிலை வர வேண்டும் என்பது தான் தெற்கத்தைய சிங்களவர் எதிர்பார்ப்பா? அப்படியானால் அது இனப் படுகொலை என்ற கருத்தினுள் அடங்கும் என்பதை அவர்கள் அறிவார்களா?

வன்முறை வெடிக்கும் என்பது சம்பந்த மான எனது பதில் வன்முறை வரும் என்பது எம்மைப் பயமுறுத்தும் ஒரு செயல். போர் வெடித்ததால் எமது நாடு எவ்வாறான உயர் கடன்களைப் பெறவேண்டியிருந்தது என்பதைத் தெற்கு அறியும். அவர்களின் இராணுவம் செய்த அட்டூழியங்களை உலகம் அறியும். ஆகவே எமது சிங்கள அரசியல்வாதிகள் வன்முறை வெடிக்க விடமாட்டார்கள். இன்னுமொரு 1983 வந்தால் ஸ்ரீலங்காவின் பெயர் உலக அரங்கில் நாறும். அதையும் மீறி அவ்வாறு வெடித்தால் வெடிக்கட்டுமே. நாம் இதுகா றும் கூறி வந்த உண்மையை உலகம் அறிந்து கொள்ளும், உணர்ந்து கொள் ளும். எமது மக்கள் இதுகாறும் பட்ட பாட்டிற்கு மேலதிகமாக நாங்கள் எதைச் சந்திக்கப் போகின்றோம்? வன்முறை வெடிக்கும் என்பது சுய நலவாதிகளின் பயமே ஒளிய அதில் உண்மை இல்லை. இந்தக் கூற்று தெற்கில் இருந்து வருவதில் இருந்து அதன் சுயநலப் போக்கைப் புரிந்து கொள்ளலாம். தெற்கில் கொழும் பில் சொகுசாக வாழ்பவர்கள் தான் இவ் வாறான கருத்துக்களை வெளியிடுகின்றார் கள்.

ஆகவே எமது கட்சித் தலைமைகள் தங்கள் நிலையை எமது மக்கள் சார்பாக அவர்களுடன் இணைந்து உருவாக்க முன்வருவார்களாக! என்னைக் கட்டுப் படுத்துவதிலும் பார்க்க தம்மை நேர்வழிக்கு மாற்றிக் கொள்வார்களாக!

நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணம்

# அடுத்த வருடத்தில் ரயில்வேத் திணைக்களம் வினைத்திறனுடன் செயற்பட நடவடிக்கை!

கொழும்பு, டிசெ. 27

ரயில்வேத் திணைக்களத் தின் சேவை அடுத்த வருடம் மேலும் வினைத்திறனாக் கப்படும் என்று ரயில் பொது முகாமையாளர் எஸ்.எம். அபேவிக்ரம தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அண்மையில் நியமிக்கப் பட்ட அமைச்சரவை இணைக்குழுவின் பரிந்து ரைக்கு அமைய ரயில் சேவை யில் நிலவும் பிரச்சினை களைத் தீர்ப்பதற்குப் பல குழுக்கள் நியமிக்கப்பட் டுள்ளன.

பெரும்பாலான பிரச்சினை களுக்கு அடுத்த வருடத்தில் தீர்வு கிடைக்கலாம். இது தொடர்பிலான பேச்சு விரைவில் ஆரம்பமாகும். தொழிற்சங்கப் பிரதிநிதிக ளும் இந்த கலந்துரையாடல் களுக்கு அழைக்கப்படு வார்கள்.

அடுத்த வருடம் புதிதாக என்ஜின்களையும் ரயில் பெட்டிகளையும் கொள்வ னவு செய்வதற்கும் நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் ரயில் பொது முகா மையாளர் தெரிவித்துள்ளார்.










இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.12.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.